சல்வியர் நியதி

அல்லது

மவணவியரின் கடமைகள்.

OFFICE OF THE REGISTRAR OF
29 APR 1925
MADRAS

இஃது

சென்தோம் ஐஸ்கூல் மாஜி உதவியாசிரியரும், "...

...ழக்கம்" எனும் நூலாசிரியருமாகிய காலஞ் சென்ற

...ன் மயிலை பா. மிக்கேல் சுவாமிப்பிள்ளையால்

இயற்றப்பெற்று,

இரண்டாம் பதிப்பு.

சென்னை, தருமசீலன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1925.

இப்புத்தகத்தின் சுதந்தரம் காக்கப்பட்டுள்ளது

விலை அணா 4.

59007

Printed at the
Dharmaseelan Press, MADRAS.

இரண்டாம் பதிப்பின்

முகவுரை.

இயற்கையும், பயனும், இதனை இயற்றியதற்குக்
ன் ஆசிரியரின் பெயர் முதலிய விவரங்களும் முதற்
வுரையால் நன்கு விளங்கலாகும். இந்நூல், உலகினுக்
பயன் தரத்தக்கதாதலின், இதன் முதற்பதிப்புப் புத்த
து ஜனங்களால் விரைவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
வ்விரண்டாம் பதிப்பை இப்போது நாம் தொடங்கி முடி
ம். இதில் முற்பதிப்பி லுள்ளவைகளைக் காட்டினும்
ருத்தங்கள் செய்யப்பட் டிருக்கின்றன; அத்தியாயங்கள்
டிருக்கின்றன; அரும்பத விளக்கம், விஷய அட்டவணை
வகளும் எழுதிச் சேர்க்கப்பட் டிருக்கின்றன. ஆதலின்
வாசிப்போர் முன்னிலும் விசேஷமாக இதிலமைந்து கிடக்
ருள்களைத் தெரிந்துகொள்ளலாம்; நற்பயன்களைப் பெறலாம்;
ணர்ச்சியையும் அடையலாம். இத்தகைய பயனுடைப் பனு
மிழுலகம் முன்னிலும் மிக்கப்பட்ட விருப்புடன் ஆதரிக்கு
ாம் கருதுகின்றோம்.

ப்பதிப்பில், அத்தியாயங்கள் வகுத்து, அரும்பதவிளக்கமும்
ணையும் எழுதிச்சேர்த்துப் பல திருத்தங்களும் செய்து கொ
துறைஜில்லா, ஒம்பூர், வித்வான்-ஸ்ரீமான்-வீ. ஆறுமுகஞ்சே
களின் நன் என்றும் மறக்கற்பாலதன்று; மிகப்பாராட்டத்

இங்ஙனம்.

மலை.

எ. டேவிட்.

—1925

விஷய அட்டவணை

அத்தியாயம்—1; கணவன் உயர்வு
,, 2; மாதர்க்குரிய நற்குணங்கள்
,, 3; துர்க்குணப் பெண்டிரியல்பு ..
,, 4; மதுவிலக்கு ..
,, 5; விருந்தோம்பல் ..
,, 6; கல்வி ...
,, 7; சுற்றந் தழுவல் ...
,, 8; பணியாளரை ஆளுதல் ...
,, 9; இல்லறத் தியல்பு ...
,, 10; மாமன், மாமி, நாத்திகளை அனு
சரித்தல் ...
,, 11; சண்டைக்கிடமின்றி நடத்தல் ...
,, 12; நட்பாராய்தல் ...
,, 13; தெய்வ பக்தி ... 2
,, 14; வியபிசாரத்தின் தீமை ... 3
,, 15; பரத்தையை நாடும் கணவனைத்
திருத்தும் உபாயம் ... 3
,, 16; மெய்யின் உயர்வு ...
,, 17; நன்மனையாள் இயல்பு ...
,, 18; கெட்ட மனைவியின் இயல்பு ...
,, 19; இல்லறம் நடத்துமியல்பு ...
,, 20; விக்ரமாதின் இயல்பு ... 36
,, 21; பிள்ளைகளை வளர்த்தல் ... 37
,, 22; மாதர் தீச்செயலால் அவர் .....
ளர்க்குப் பழிப்புண்டா
மெனல் ... 45
,, 23; மாதர்க்குறுதி மொழி ... 46
,, 24; மோக்ஷ மார்க்கம் ...
அரும்பத விளக்கம் ...

செல்வியர் நியதி

அல்லது

மனைவியரின் கடமைகள்.

காப்பு.

நிலமண்டில வாசிரியப்பா.

1 புருஷனை மணந்த பூவையர் ஒழுக்கம்
தெருளுற விளக்கித் திரட்டிச் சுருக்கி
2 அருள்பெற வோத அமலனி னுபய
மருமலர்க் கழல்கள் மகிழ்தருங் காப்பே.

மகடூஉ முன்னிலை.

1 அன்பும் பொறையும் அறிவும் அமைந்த
மின்புரை மேனி மெல்லியே கேளாய்.

அத்தியாயம்-1.

கணவன் உயர்வு.

நூல்

1 சென்னி குனிந்து தெய்வம் வணங்கி
உன்னிக் கழுத்தை உகந்து கொடுத்த
2 கன்னி மார்கள் கணவனுக் கடக்கம்.
முன்னோ ருரைத்த மொழியிது வாகும்.
3 சுத்த மனமொடு தூயவ னருளை
நத்திப் புரிவது நறுமணத் தியல்பாம்.
4 உலகமே படைத்த ஒருவனே யன்றித்
தலைவியர்க் குயர்ந்தோன் தலைவனே யாகும்.

5 தன்னுடன் பிறந்தோர் தன்னை யீன்றோர்
தன்னா யகனிற் றாழ்ந்தவ ராவார்.

6 உன்னுட லதனில் உயர்ந்த பாகமாம்
சென்னி போன்ற சிறப்பை வகித்தோன்

7 உன்னைக் காக்கும் உரிமை யுள்ளோன்
உன்னி மணந்த ஒருவனே யாகும்.

8 கண்ணிற் கிமையெனக் காதலி தன்னை
மண்ணினில் காத்திட மதிப்பவன் பதியே.

9 உற்றவள் இல்லிற் குகந்தவள் பெருமை
பெற்றவ ளென்று பேணியே நாளும்

10 நோயிலும் துயரிலும் நுடங்கிய போதுனைத்
தாயிலும் மேலாத் தாங்கிடும் கணவன்.

11 உன்னை விரும்பி உகந்து தேடிப்
பொன்னை யழித்துப் புகழ்மணஞ் செய்து

12 உன்னதப் பணிதுகி லுனக்குக் கொடுத்து
அன்னமு முதவி அல்லும் பகலும்

13 அன்புமா தரவும் அகத்தினிற் காட்டி
இன்பும் மகிழும் இதமு மீந்துனைத்

14 தென்புறச் செய்து தீவினை யால்நீ
துன்புறும் வேளையுன் துயரொழித் துனக்குக்

15 கம்படி தாங்கும் கையென உதவி
வம்பு வராமல் வல்லரண் செய்து

16 கண்போ லுன்னைக் கருத்தினில் மதிக்கும்
பண்புறும் உரியோன் பதியென வறிக.

17 பாரியாள் கணவனிற் பாதியுடலும்
சீரிய வுயிருஞ் சேர்ந்தவளென்று

18 நினைவினிற் கொண்டு நிலவிடுஞ் சிலபேர்
கனைகட லுலகில் கழறுத லாலே

19 சதியும் பதிக்குச் சமான மாகுவள்
மதியுறு மங்கையர் மணந்தவர்க் கிணையே

20 மந்திரி யானேன் மகிபதிக் குயர்ந்த
முந்ததி பதியென மொழிதலைப் படியோ

21 அப்படி யேதான் அமைகுவர் மனைவியர்
இப்படி தனிலென வியம்புவர் மதியில்

22 தப்புள மாதர் சரியிது வன்றே
ஒப்பிலன் பதியே ஒருவனே நீங்க.

23 மனுஷனுக் காக மனைவியுண் டானாள்
மனுஷிக் காக மனிதனா கியதிலை

24 தனிமெய் யிதனால் நாயக னுயர்வே.
இனிமையா யவன்கீ ழிசைந்தவள் மனைவியாள்

25 கொழுநன் பணியைக் குலமகள் செய்து
தொழுதவன் றன்னைத் துதித்தலே சிறப்பாம்.

26 தலைவன் வேலை தன்னை முடித்தபின்
பலபணி புரிதல் பாரியின் கடனே.

27 நாயகன் பணிமுதல் நாடி முடித்து
ஆயநின் அலுவல் அதன்பின் செய்க.

28 மணமது தந்து மகிழ்ச்சி யளித்தவன்
கணவனே யென்று கருதுவாய் நிதமும்.

29 கடவுளுக் கடுத்த கடவுளென் றெண்ணிப்
புடவியில் மிகுதியும் புருஷனைச் சிநேகி.

30 என்றும் பிணக்கின் கில்லா நேசம்
நன்று பதிவழி நாடி நடக்க

31 புருஷன் கருத்தொடு பொருந்தி யில்லறம்
கருதி நடத்தல் கடனும் மனைக்கே.

32 கண்க ளிரண்டுங் கலந்தோர் பொருளையே
மண்ணினிற் கண்டு மகிழ்வது போல.

33 சதியும் பதியும் சந்தத முவந்து
மதியினூற் றங்கள் மனமொரு மித்துச்

34 சொல்லரும் பாக்கியந் துகளறத் தேடி
இல்லறம் நடாத்தல் எழிலொடு புகழாம்.

35 கல்லென் றாலும் கணவனே பெரியன்
புல்லென் றாலும் புருஷனே சிறந்தோன்

36 சொல்லுமிக் கணவனைத் தொழுது பேணும்
மெல்லியர் மேற்கதி மேவியே வாழ்வார்.

37 கொழுநன் மகிழும் குண முறும் மனைவி
பழுதிலா வில்லின் பாக்கிய மாமே.

38 கண்கண்ட தெய்வம் கணவனே என்று
மண்டலத் தவனடி வணங்கி யவனொடு

39 மதியுடன் மனைவி மனமொரு மித்துப்
பதியினில் வாழ்வதே பாக்கியம் மனைக்கு

40 இல்வாழ்க் கையினி லிசைந்ததம் பதிகள்
நல்லவின் பத்துடன் நண்ணிவாழ் வதற்கு

41 முதல்உப கரணம் முழுச்சமா தானம்
அதனுட னன்பும் அவர்க்குறல் வேண்டும்

42 ஒருவர் மகிழ ஒருவர் விருப்பந்
தருமொழி புகன்றிடிற் சாருமே உவகை

43 தெற்றென விளங்கும் செம்மொழி பகர்ந்தால்
உற்றிடு மிருவர்க் குளம்பூ ரிக்கும்

44 பழுதிலா அன்புடன் பாரியாள் கணவனைத்
தொழுதிட வருமே சொல்லரும் பாக்கியம்

45 இசையுங் கணவனை ஏற்றநற் றொழும்பால்
வசமாக் குவது மங்கையர் திறனே

46 பிடியால் களிற்றைப் பிடிப்பது போலே
கடியா நலத்தால் கணவனை வசஞ் செய்

47 இன்சொல் இன்செயல் எனுங்கயிற் றால்விலங்
கன்னியை நாடும் கணவனைப் பிணிக்க.

48 உள்ளன் பதனை உரியசொற் செயலால்
வெள்ளெனப் பதிமுன் விளக்கல்மெல் லியர்கடன்

49 சொல்லாற் செயலாற் றுணைவன் களிக்க
மெல்லியல் செய்வதே வெற்றிக் கிடமாம்

50 பர்த்தா தனக்குப் பயந்து பாரியாள்
சுத்தமா யவன்பணி சூழ்தலே சிறப்பாம்

51 அன்ன மாடை அளிக்கும் நாதன்
சொன்ன வாறு தொழில்செயல் கடனே

52 எஜமா னுரைக்கு எதிருரை யின்றி
நிசமா யெதுவும் நிகழ்த்துதல் வேண்டும்

53 யோக்கிய முற்று யோகமா யில்லறப்
பாக்கியம் பெறுவாள் பாரியா ளாவள்

54 ஒருவர்க் கொருவர் உவந்துதம் பதிகள்
வருவது கொண்டு வாழுதல் கடனே

55 எல்லா மிருந்தும் எதுவு மிசைந்தும்
புல்விட விங்கொரு புருஷ னில்லாள்

56 சொல்லருந் துயர்ப்படல் தொல்வழக் காதலால்
இல்லாட் கிறைவன் இருப்பதே பாக்கியம்

57 நேசிக்கும் மனையாள் நித்தலுங் கணவனைப்
பூசிக்கும் வகையது புகலக் கேண்மோ

58 ஈசனுக் கிரண்டாம் ஈசனென் றுளத்தில்
வாசமா யிருக்க மதித்துக் கணவன்

59 ஆசையு மன்பும் அதிமரி யாதையும்
கூசிடாப் பணிவும் குலவிடும் மகிழும்

60 மாசில் உதவியும் மந்திரித் தன்மையும்
பேசிடு மவன்பால் பேணிச் செலுத்திப்

61 பாசமா ரவனைப் பாரில் தனக்கு
ஆசில் லாத ஆதார வென்றும்

62 நிதிக்கெலா முயர்ந்த நீணிதி யென்றும்
கதிபெறு மனையாள் கருதுதல் கடனே.

அத்தியாயம்-2.

மாதர்க்குரிய நற்குணங்கள்.

1 தற்காப் புடனே தாரணி மீது
கற்புடைத் காதல் கன்னியர்க் கழகு

2 பொறைபாதி நற்குண பூஷணி யாகிக்
குறைவற மனைவி குலவுத லழகு

3 முகவழ கதனினும் அகவழ கதுவே
மகளிர்க் கழகாம் மாநில மதிலே

4 என்னினு மழகினர் எவருள ரென்று
இந்நில மீது எண் ணுவாள் பதரே

5 அருமைசேர் கல்வி அறிவிலை யெனினும்
பெருமைசேர் செல்வப் பீடிலை யெனினும்

6 உரிமைசேர் பெண்கட் கொப்பிலா மேன்மை
தருகுண வழகது தாணியிற் பெரிதே

7 நிறத்தினால் உறுப்பினால் நிலைத்த வழகினும்
திறத்த வேலை சிறப்பா மனைக்கே

8 வீட்டுப் பொருளின் மேன்மை யறிந்ததை
ஈட்டி யாண்டால் இருநிதி பெருகும்

9 வேண்டு முதவி விரும்பி அளிக்க
ஈண்டுன் தலைவன் இருப்பதே பாக்கியம்

10 பொன்னுடை பூண்டு புருஷன் களிக்க
மின்னணி சூடி விளங்கல் வேண்டும்.

11 இன்பமுண் டாக்கும் இல்லக் கிழத்தி
அன்பிற் பிரியாள் ஆர்வல னிடத்தே

12 ஆர்வலன் நன்மை அதனையே விரும்பித்
தேர்வது நாளும் சிறப்பா மனைக்கே

13 நாயகன் இன்னான் நமதுநன் னெறியிதென்
றூய வறிவு அமைந்தவள் மனைவி.

14 தேவ பயமதைச் சிந்தையில் நாட்டிப்
பாவந் தனக்குப் பயந்து நடந்து

15 ஆவிபோற் கணவன்மீ தன்பு செலுத்தும்
தேவியா னவளே சிறந்தவ ளாவாள்.

16 அன்னை தயையும் அடியாள் பணியும்
பொன்னி னழகும் புவியின் பொறையும்

17 வேசைத் துயிலும் விளங்குநற் குணமும்
மாசிலாக் கற்பும் மந்திரி மதியும்

18 காசினி மீதிற் காட்டிடும் பெண்ணே
பேசிய வில்லறம் பேணிடு மனைவியாம்.

19 மணஞ்செயும் முனஞ்சில மங்கையர் கருதும்
குணக்கே டான கொள்கைகள் பலவுள

20 அவற்றால் திங்குகள் அடைவ தன்றி
உவக்கும் செய்கை யொன்று மிராதே

21 தங்க நகையுடை தரித்திட வேண்டும்
எங்கும் மதிப்பாய் ஏகிட வேண்டும்

22 திங்கள்போல் ரூபாய் சேர்த்திட வேண்டும்
இங்கு புருஷன் இஷ்டத்தைக் கெடுத்துத்

23 தங்குநம் மனம்போல் சகலமும் நடத்தி
அங்கவன் பணத்தை அடியொடு பிடுங்கிச்

24 செங்கையி லிறுக்கிச் செலவிட வேண்டும்
சிங்கம் போல்நாம் செருக்குற வேண்டும்

25 பந்துக்கள் வந்தால் பறக்கடித் தேபதி
எந்த வுரைக்கும் இணங்கி நடக்கத்

26 தந்திரஞ் செய்யச் சமர்த்தாகள் வேண்டுமென்
றிந்த விதமெலாம் எண்ணிடும் பாவையர்

27 வந்த தலைவன் வசப்படா விட்டால்
அந்தத் தினமே அமர்தொடுத் திடுவார்

28 வதுவை முடிந்தொரு வாரமா வதற்குள்
சதிபதி இவ்விதம் சண்டை இடுதலைப்

29 பதிகளில் கண்ணால் பார்த்து வருகிறோம்
அதின்கா ரணமோ அந்தாங் கத்தில்

30 வதிந்த கருத்தை மனைவிசெய் பொழுது
பதியதற் கிணங்காப் பான்மைய தாகும்

31 தலமதில் மெய்ம்மணம் தான்செய்த பதியுடன்
மலரும் மணமும் மருவுதல் போலும்

32 சலமும் பாலும் சாருதல் போலும்
குலமகள் பொருந்துங் குணமே சிறப்பு

33 நகமும் சதையும் நண்ணல்போற் பதியுடன்
வகையாய் வாழ்தல் மனையினுக் கழகு

34 கொண்டவன் வீட்டிற் குறித்தவே லைக்குறை
கண்டுளம் வெறுத்துக் கண்கள் சிவந்து

35 வைதிடு மட்டும் வைத்திடா துயர்பணி
செய்து பதியைத் திருப்திசெய் திடல்நலம்

36 அன்புறு கணவனால் அடிபடா தென்றும்
இன்ப முறுவாள் ஏற்ற மனைவியாம்

37 துன்புற்ற வேளை துணைவன் துயரை
அன்புற்ற சொல்லால் ஆற்றுவாள் மனைவி.

38 கடிமணஞ் செய்த கணவனால் மிக்க
மிடியுறும் பொழுதும் வெறுப்படை யாது

39 அவனுடன் முகமலர்ந் தழகுற வில்லறம்
அவனியில் நடத்தும் அரிவையே சிறந்தவள்

40 பிறந்த வீட்டைப் பிரிந்து வந்து
சிறந்த பதியகம் சேர்ந்த பின்பு

41 மறந்தும் தனியுன் மனைபோ காதே
பறந்திடு மதனாற் பதிவிர தைக்குணம்

42 உன்னுடன் தலைவன் உறைந்திடாப் போது
அன்னியர் காண அலங்கரித் திடாதே

43 அன்னிய புருஷர் அகத்துழி யுற்றால்
மன்னிய மறைவில் வசித்திடல் கடனே

44 தன்னுடல் மாயும் சங்கடம் வரினும்
அன்னிய ராசையை அகத்தில்வை யாதே

45 கணவனைக் காசுக் கலைத்திடா தவனாக்
குணமுடன் கொடுத்தது கொள்ளுதல் நன்று

46 திதிக்கோ ருடையணி தேடிட வென்று
பதிக்கிடர் தருவது பாதக மாகும்

47 கணவ னறியாக் கடனுடன் பட்டு
அணிபணி செய்தல் அநீதி யாகும்.

48 காதலன் பாதகக் கடுவழி புகுந்தால்
ஓதலா மாது உத்தம நெறியே

49 ஞாய மின்றி நலியப் பேசும்
நாயக னாகில் நாயகி பூமியில்

50 வாயை யடக்கி வல்வினைப் பயனென
நேயமா யில்லறம் நேர்வது கடனே.

51 தலைவன் கோபம் தானுறும் பொழுது
தலையால் வணங்கித் தாழ்வது தருமே

52 நிலமதி லவன்றன் நேசமாம் பொழுது
பலமதி யவனிடம் பகருதல் பாங்கே

53 அகமுடை யானுக் கழகிலை யென்று
சுகமுற அயலான் தொடர்புறல் பாவம்

54 அழகும் நிறமும் அநித்திய மாகும்
பழகின பின்னவை பாரினில் வெறுப்பே

55 அழகினும் குணமே அரியநல் தேட்டம்
செழிகுண வழகே சிறந்ததாம் கணவன்

56 குரூபி யெனினும் குணமிலா னெனினும்
சுரூப முடைய சுந்தர னென்றும்

57 நற்குண மார்ந்த நாயக னென்றும்
பொற்குண மாதவற் போற்றுதல் வேண்டும்.

58 நேயமாம் பதிபணி நிறுத்தித் தன்பணி
ஏயப் பார்ப்பது இயல்பல மனைக்கே

59 உன்னியோர் பிரபு ஊழியன் ஒருவன்
தன்னைநே சித்துத் தனக்குறும் வரும்படி

60 அனைத்து மவற்கே அளித்தவ னிஷ்டம்
தனக்கிட ரின்றித் தானடந் திட்டால்

61 அவனப் பிரபுவை அனுசரித் தெவ்விதம்
அவனியில் நடப்பனோ அப்படி மனையாள்

62 மணந்தோ னிடத்தில் மருவி நடந்தால்
குணமெலா மவட்கே கூடிடு மன்றே.

63 அற்ப நிந்தையும் அநுதின சிரமமும்
இற்கிழத் திகளுக் கேற்பட லியற்கை

64 ஆதலின் குடும்பத் தமையுந் துன்பம்
மாதர்கள் சகித்தல் மதியா கும்மே.

65 ஏற்ற குடும்பத் தியைந்த மாது
சீற்ற மாற்றிச் சென்னி தாழ்ந்து

66 போற்றும் பலர்சொல் பொறுத்து வீட்டறம்
ஆற்றுதல் மிகவும் அறிவிற் சிறந்ததாம்

67 மாற்றித் துயரை மனதினை யென்றுந்
தேற்றி நடப்பவள் தெய்வப் பெண்ணும்

68 எவ்விதத் துன்பம் இல்லிடத் தெய்திநும்
ஒவ்விய மனத்துயர் உற்றிட லின்றிச்

69 செவ்விய கணவன் செவிதனி லினிமை
அவ்வயின் மொழிபவள் அறிவுறு மனைவியே.

70 உள்ள கணவன் ஒவ்வொரு நாளினும்
விள்ளும் தொழில்களை விழைந்து புரிந்தவன்

71 தள்ளி யடிக்கினும் தானவன் தாளினில்
கள்ளமின் றிப்பணி காதலி யுத்தமி.

72 செய்வன திருந்தச் செய்யென் றவ்வை
உய்வகை யறிந்து உரைத்த படியே

73 தெய்வ பயமதைச் சிந்தையி லிருத்திச்
செய்வன செவ்விதில் செய்பவள் மனைவி.

74 கற்புள மாதர் கனசெயல் எவையெனில்:
தற்பர னருளால் சார்ந்தநற் கணவன்

75 சொற்படி நடந்தவற் றொழுது பணிந்து
பற்பலர் மேற்செலும் பாவிழை வகற்றித்

76 துப்புர வான துணைவன் பதத்தை
எப்பொழு துந்தம திதயத் திருத்திப்

77 பத்தி விடாமல் பற்பல நாளும்
பத்தினி யெனும்பெயர் பாவ நடத்தலாம்.

அத்தியாயம்-3.

துர்க்குணப் பெண்டிரியல்பு.

1 ஆளன் பொருளை அவனுரை யின்றி
வாளா வழிக்கும் மனைவியே கூற்றம்

2 கணவ னுரையைக் கடந்து நடக்கும்
குணமிலா ஸ்திரீயவள் கூரரி வாளாம்

3 எழிற்சமா தானம் இலாதவள் குடும்பம்
கழிபெரும் புலிவாழ் காட்டினுக் கிணையே

4. வெகுளியை யறுத்து வேரோடு களைந்து
தகுபொறை தாங்கிச் சற்குணம் பெறுமல்

5 கொண்டவன் மீது குறைசொலும் மனைவி
மண்டலத் தவனை மாய்த்திடும் பேயே

6 வாய்ச்சொல் லாலும் மனச்செய லாலும்
தீச்சுடு வதுபோல் செய்பவள் பிடாரியே

7 கொண்டவன் மனது குன்றப் பேசும்
பெண்டுகள் விரைவில் பிரிவா ரவனை

8 நையுறப் பேசி நாயகன் வெகுளச்
செய்திடும் மனைவி சிற்றறி வோடு

9 பையா வந்தனைப் பயமின்றி மிதித்து
ஐயுறும் மதியிலி ஆவா ளன்றே

10 கையதை வீசிக் கனவுடை குலுக்கி
மெய்யதை மினுக்கி மிகுதியும் நகைத்து

11 வையக மறிய வன்மையாய்ப் பேசி
ஐயுற நடத்தல் அழகல மனைக்கே.

12 அகமுடை யானை அடக்கி யாள
அகமதி லெண்ணும் அநீதக் காரி

13 சுகமதை யிழந்து துயர மிகுந்து
இகமதின் மேன்மையற் றிருந்திடு வாளே.

14 வரவுக்கு மேல்செல வழிப்பவள் கணவன்
சிரமதில் பாரம் தியங்கிட வேற்றியப்

15 புருஷன் றன்புறப் புரிவதோ டவனின்
அருமுயிர் தனக்கும் அறுதிசெய் வாளே

16 போகம் விரும்பிப் புருஷ னுடைய
தேக சுகத்தைச் சிறிதுமெண் ணாது

17 நாகம்போல் சீறி நையப் பேசி
வேகமா யவன்மேல் வெகுண்டவ னுக்கு

18 ஆகுறும் பணியில் அசட்டை செய்வாள்
சாகுறு மட்டும் சார்ந்தவன் றனையே

19 காத லுடைய கணவனைப் பார்த்துப்
பாதக மாகப் பலப்பல பேசி

20 இதைச்செய் அதைச்செய் யென்றுகுற் றேவல்
பதைக்க வியற்றிடப் பண்ணும் பெண்டிர்

21 எஜமா னனையே ஏவலா ளாக்கும்
நிசமா மறிவிலா நெஞ்சுடை மாக்களே

22 பதிதனக் குரிய பத்தியும் பணியும்
மதியு மிழந்து மடத்தன மமைந்து

23 சதியென வாய்ந்த சண்டிகள் கூற்றமாம்
கதிபெவ ருக்கதோ கதியென வறிக.

24 பாரியின் கடனும் பாங்குறு நடையும்
நீரமா யறியா ஸ்திரீகளும் பதரே.

25 வரிக்குமுன் கருதும் வகையினை விட்டு
வரித்தபின் முறைபிடும் மங்கையும் பதரே.

26 செலவைச் சுருக்கிச் சீட்டுப் போட்டு
நலமுறுங் கணவனை நலிய வைத்துக்

27 கலனுடை சேர்க்கக் கருதும் பெண்டிர்
தலமிசைப் பதியைச் சபிதியி லிழப்பார்

28 நாயகன் வேலையால் நாளுமலைந்து
நேயமாய்த் திரும்பும் நேரம்நீட் டித்தால்

29 ஆயவி ரக்கம் அகத்தில்லை யாமல்
சாயு மனத்தால் சந்தேகங் கொண்டு

30 நோயுற வினுக்கள் நூறு கேட்டே
மாயும் படிக்கு வைதே யவனைச்

31 சீயம் போன்று சீறி விழுந்து
தீயவாம் நிந்தைகள் தீவிர மாக

32 வாயினல் வழுத்தும் மாதவள் பேயே!
வாயினல் பெண்கள் வாழ்வை யிழப்பது

33 மாய வுலகில் வழக்க மாதலால்
தீயினும் கொடுஞ்சொல் திகைத்திடப் பேசல்

34 மாயினு மடாது மனைக்கிழத் திகட்கே
நோயிது வென்றே நுவலுவர் பெரியோர்.

35 பிரிய மாகப் பேசிட லன்றியும்
உரியவன் மகத்துவம் உணர்ந்தி டாமலும்

36 மரியா தையிலா மாடே போலவும்
வரிசை தப்பிவா யாடிடு மங்கை

37 தரைமிசைத் துன்பம் தானடை குவளே
நிரையா நரகம் நேரு மவட்கே.

38 பிணங்கிடும் வகையது பேசிடத் துணியும்
அணங்கின்மீ தாடவர் அன்பினை விடுப்பார்

39 ஆசைப் பட்டதை அறிந்துத வாத
நேச மில்லா நேரிழை தன்னையும்

40 தேக சுகத்தைச் சிந்தனை செய்தே
ஆகும் கணவனுக் கமைந்தது செய்யா

41 வாகிலாப் பெண்ணையும் மணந்தவ னவர்மேல்
மோக முறுதலை முழுது மொழிப்பான்.

42 காதலன் தனது கருத்துக் கிசையும்
போதமி லாது போரிடு மங்கை

43 தீதுற அவன்தன் சிரத்தை யறுக்கும்
கோதுறும் வாளெனக் கூறுதல் தகுமே

44 கண்டித வேதக் கட்டளை கடந்தே
பண்டைய வழக்க பழக்க மனைத்தும்

45 பெண்டுக ளொழிக்கப் பிரயாசைப் பட்டால்
மண்டிடு துன்பம் வந்திடு மவர்க்கே.

46 வீட்டைச் சுத்தமாய் விளக்காள் முகமது
காட்டச் சாமான் கறைபறத் தேய்க்காள்

47 தீட்டாள் ஒளிபெறத் தேடிய வரிசியை
வாட்டாள் மிளகாய் மசியக் கையை

48 ஒட்டி யரையாள் உருசியாய்ச் சமைக்காள்
நீட்டியெவ் வேலையும் நிதமும் செய்வாள்

49 சாட்டுவாள் குற்றம் சாமான் களின்மேல்
ஆட்டுவாள் தேகம் அயர்ந்து பணிசெய

50 வாட்ட முறுவாள் வாயடி யடிப்பாள்
கூட்டுவாள் கும்பல் கூறினால் குற்றம்

51 மூட்டுவாள் சண்டை முணுமுணுத் தேதிருப்
பாட்டுகள் பாடிப் பசப்புவாள் பதரே.

52 சோம்பே றிப்பெண் சூட்சமாய்ப் பிழைக்க
ஆம்பல வழிதனை யறிந்தி டாமலே

53 கூம்பின வாயைக் கூவித் திறந்து
பாம்பெனச் சீறும் பலரிட மிரந்து

54 நோம்பல சொல்லவர் நுவல வாடியே
தேம்பித் தேம்பித் திரிந்தலை குவளே.

55 சிற்சில பெண்டீர் தீக்குண மதனால்
நற்குணங் கொண்டு நடத்தும் பெரியோர்

56 பற்பல விதமதி பகருதல் கேளார்
அற்புத மாயெலாம் அறிந்தவர் போலே

57 முற்பிறந் தவர்சொல் முழுதும்வேண் டாமல்
தற்சித் தப்படி தரணியில் நடப்பார்

58 மார்க்க மறியா மடமை வாய்ந்த
மூர்க்க ரானமூ தேவிய ரிவரே.

59 மூதேவி நாரியர் முகத்தில் விழித்தால்
சீதேவி யகன்று செல்லுவாள் என்ப.

60 கடிமணஞ் செய்த கணவனி னீங்கிப்
படிமிசை வாழ்வாள் பவுஷதை யுரைக்கின்

61 கட்டினை யறுத்துக் கடிதய லூர்செலும்
பெட்டை நாயே பெரிதும் போல்வாள்

62 தொல்லுல கினிமேல துலங்குமீ காமன்
இல்லா மரக்கலம் இணைந்திவ் வுலகில்

63 காற்றின் வழியே கடலினி லேகி
ஊற்றினி லகப்பட் டொழிவது போலவள்

64 இடறுகள் பட்டு எவ்வெவ ரிடமும்
தடையற வடைந்து தன்னிஷ் டம்போல்

65 தேக சுகமும் செல்வமு மிழந்து
ஏக வழியற் றெண்ணு தெண்ணி

66 அயா மனமது அன்னமு மின்றித்
துயர மிகுந்து துஞ்சுவாள் வீணே.

67 மனதுக் கிசைந்த மணமகன் வறுமையால்
தனது பெருமை தாழ்ந்திடும் போது

68 குறையை யெண்ணிக் கொஞ்சமு மிரங்கா
தறையி லிருந்த வரும்பொரு ளெல்லாம்

69 நிறைவிலா தொழிய நேர்ந்ததே யென்று
இறைவனை நிந்தித் திழிவுகள் பேசிப்

70 பிரமாத மாகப் பிணங்கியுண் ணாமல்
கிரகத் தொழில்கள் கிரமமாய்ச் செய்யாள்

71 தரமிலாப் பெண்டெனச் சாற்றுதல் தகுமே;
வரனை மடிக்கும் மறலியு மிவளே.

அத்தியாயம்-4.

மது விலக்கு.

1 புருஷன் மதுவினைப் புத்தியற் றருந்திடில்
தருண மறிந்து தகுமதி யுரைத்துத்

2 திருத்தமாம் வழியில் சேர்ந்தவன் நடக்கக்
கருத்துடன் செய்வது காதலி கடனே

3 குடியினாற் பொருள்கள் கோடி யிழந்த
குடிக ளநேகம் குவலைய மீது.

4 குறையைச் செய்யும் குடியினால் குடியில்
நிறையிரு செல்வமும் நிலைகெ டுறுவதால்

5 நிறையெழிற் பெண்டிர் நிலமதில் குடித்தால்
கறையுறும் மதிப்பும் கனமுங் குறையும்

6 நாரியர் குணமெலாம் நாணி ஒளிக்கும்
சீரிய ரிவர்களைச் சேரா தொழிவார்

7 திடனுப்ப் பதியொடு சேர்ந்து குடிப்போர்
கடன்வாய்ப் பட்டுக் கவலைமேற் கொண்டு

8 கண்டோ பேசக் கெளரவங் குறைந்து
திண்டாட்டப் பட்டுத் தெருவோ டலைந்து

9 எல்லா மிழந்து ஏக்க மிருந்து
சொல்லா தொழிவர் தூரவூ ரினுக்கே

10 ஆணும் பெண்ணும் அளவிலாக் குடியால்
பூணும் பணியும் பொருளும் தோற்று

11 ஊண் துணி யின்றி உறக்க மீறிச்
சாண்வயி றெட்டிச் சஞ்சலப் பட்டுக்

12 காண்போ ரிரங்கக் கலங்கி வருந்தி
வீண்சோ கத்தால் விரைவி னிறப்பர்

13 இப்படி தனிலே இப்படி யாகத்
தப்பிதம் சார்ந்து தாழ்வுறும் குடும்பம்

14 ஒன்றிரண் டல்ல உண்மையீ தாதலின்
என்றும் குடியற் றிருத்தல் வேண்டும்

15 தோய்விஷப் பாம்பைத் தொடுவது போலாம்
தீவிஷக் குடியைத் தீண்டுதல் வேண்டாம்.

அத்தியாயம்-5

விருந்தோம்பல்.

1 வேலைக் கஞ்சி விருந்தினர் வந்தால்
காலனைப் போல கடிந்து தூரத்தலும்

2 கணவ னிடத்தே காய்ந்து விழுதலும்
குணமிலா மங்கையின் கோட்பா டாமே

3 துறந்தவர் தமக்கும் துவ்வா தவர்க்கும்
இறந்தவர் தமக்கும் இல்லறம் துணையே.

4 வேட்டவ னிடத்தே விருந்தினர் வந்தால்
வாட்ட முடனே மதியிலா மனைவி

5 ஓட்டிட வெண்ணி உரக்கக் கூவித்
தேட்டெலாம் போச்செனத் திட்டுவாள் மிகுதியும்

6 நீட்டுவாள் முகத்தை நிலமிசைப் படுப்பாள்
காட்டுவாள் மாயம் கனத்த தலைநோய்

7 தீட்டுடல் வலிமிகச் சேர்ந்ததென் றுரைப்பாள்
மூட்டுவாள் கோபம் முணுமுணுத் திடுவாள்

8 வீட்டகம் வந்தோர் வெளியே கிடவே
நாட்டிய மாடி நாய்போற் குலைப்பாள்

9 இன்னவள் மண்ணில் என்றும் பேயாய்
மன்னுவா ளிவளே மாபா தகியே.

10 தெய்வ மஞ்சித் திருட்டுக் கெடுமனம்
பொய்வஞ் சகமும் புனைசுருட் டெல்லாம்

11 தையலர் ஒழித்துச் சார்ந்த விருந்தினை
வையக மீது மதித்துப சரிக்க.

அத்தியாயம்-6.

கல்வி.

1 பெண்டீர் வேலை பிழைபற முடித்தபின்
அண்டை அயலில் அடிக்கடி போவதால்

2 கண்ட துர்க்குணம் கலத்த லன்றிச்
சண்டை முதலிய சச்சர வுறுவதால்

3 வேலை யொழிந்த வேளைவீண் பேச்சைச்
சால வொழித்துத் தலைவனை வேண்டித்

4 தாலமேல் செபமும் தவமும் பூஜையும்
ஏல வியற்றி இருந்திடு மார்க்கமும்

5 வயநா தருக்கு மங்கைய ருலகில்
நயமுறும் புதல்வியும் நல்லதோர் மனைவியும்

6 ஜெயமுறு மமைச்சனும் செம்மைத் தாயும்
பயனுறு சுகந்தரு பாவை யாளுமாய்

7 அயலார் பழிக்கா தமைந்திடு வழிகளும்
இயலுமில் லறத்தின் ஏற்ற வகைகளும்

8 பெண்கட் குணர்த்திப் பிழையிலா நீதி
நண்ணிப் புகட்டும் நம்சுய கல்வியே

9 ஆதலின் மாதர் அங்கு மிங்கும்
போதலை யொழித்துப் புத்தி யுடனே

10 எண்ணும் எழுத்தும் எழி லுறக் கற்றபின்
மண்ணில்முன் னுரைத்த மாசற்ற மேலாம்

11 தன்மைகள் கொடுக்கத் தக்கநூல் கற்றுப்
பண்ணிசை யாலே பரமனைப் பாட

12 வண்ணமாங் கீத வகையினிற் சிறிதும்
உண்ணும் பாகத் துயர்ந்தசாஸ் திரமும்

13 பழகி யாவரும் பதிவிர தையென
அழகுடன் போற்ற அமைவது கடனே.

அத்தியாயம்-7.

சுற்றந்தழுவல்.

1 பெற்றோர் தம்மைப் பேணிக் கொள்ளுதல்
உற்றோ ரெவரையும் உரியதோர் அன்பால்

2 முற்றவும் பணிதல் முதல்வனைப் போற்றல்
நற்றவத் தந்தைதாய் நன்றி யறிதல்

3 பற்றுசோ தாருடன் பாசமா யிருத்தலென்
றுற்றவித் தன்மைகள் உயர்பெண் குணங்களே.

அத்தியாயம்-8.

பணியாளரை ஆளுதல்.

1 மனையினை யாளும் வகையில் லாட்குத்
தினையள வேனும் தெரியா விடிலோ

2 வீட்டி லுள்ள வேலைக் காரர்
நாட்டமாய்ப் பணிகளை நயந்து செய்யார்;

3 தமதல் லாத சாமா னெனவே
அமையுமில் லப்பொருள் அழிக்கத் துணிவார்

4 வேலைக் காரரை வெருட்டி யாளத்
தால மீதில் தத்துவம் வேண்டும்

5 திருட்டுத் தொழிலே செய்திடு மாட்கள்
உருட்டி விடுவார் உள்ளதை யொழித்தே

6 இவ்வகை யாரை யேவல்கொள் வதிலே
ஒவ்வொரு வேலையும் உற்றஜாக் கிரதையாய்

7 அவ்வில் லத்தாள் அமைந்திட வேண்டும்
தவ்வைசேர் தொழும்பர் தாமே தொழிலைச்

8 செவ்வை யாகச் செய்குவ ரென்று
எவ்விதத் தாலும் எண்ணுதல் தகாது

9 பணிசெய் யாட்கள் பலபே ரிருப்பினும்
அணிசேர் மனையாள் அருகினி லிருந்து

10 கணவன்வே லைகளைக் கவனமாய்ச் செய்யத்
திணிசே ராட்களைத் திருத்துதல் வேண்டும்.

அத்தியாயம்-9.

இல்லறத் தியல்பு.

1 கணவனும் மனைவியும் கருத்தொரு மித்துக்
குணமுடன் தெய்வக் கொள்கையிற் சிறந்து

2 வணமுடன் மூவகை மனிதருக் குதவிப்
பணமெனும் புதல்வரைப் பாரினி லீன்று

3 இணக்கமாய் நல்வழி இசைந்திட வியற்றி
வணக்கமாய் நடத்திடும் வகையே இல்லறம்

4 சாவு வாழ்வில் சான்றோ ருரைப்படி
மேவுஞ் செலவை விரும்பிச் செய்து

5 வீண்செல வதனை மிகவே தள்ளிக்
காண்போர் களிக்கக் கடவுளர் விரும்ப

6 வீட்டறம் நடத்துதல் மெல்லியர்க் கழகாம்
நாட்டினி லிதுவே நல்லற மாகும்

அத்தியாயம்-10.

மாமன், மாமி, நாத்திகளை அநுசரித்தல்.

1 தந்தை வீட்டைத் தான்விட்டு நாயகன்
சொந்தவீ டடைந்து சுபமுறும் பொழுது

2 மாமன் மாமி மகிழும்படிக்குப்
பூமிக்குள் மனைவி பொறுமை தாங்கி

3 அன்புட னடந்தால் அவர்களு மிவளை
இன்புறு புதல்வியென் றெணியுப சரிப்பார்

4 மாமி மாமன் மனமகிழ் வுடனே
பூமியில் சேர்ந்த பொன்மக ளிவளே

5 சாமி கொடுத்த தனிநிதி யிவளே
ஆமென வெண்ணி அன்பாய் நடத்த

6 நாத்தியோ ரகத்திகள் நல்லுற வாக
நேர்த்தியா யவரொடு நேசம்பா ராட்டி

7 மருமக ளாகவோர் மனைக்கு வந்தவள்
தருகுண வொழுங்கொடு தானடந் திட்டால்

8 சரியா யில்லறந் தாணியில் நடத்[illegible]
பெரியதோர் பாக்கியம் பெருகு மன்றோ

9 மணத்தை முடித்தபின் மணமகன் வீட்டுக்
குணத்தினிற் குறைகள் கூறுவோர் பதமே

10 மனைவி தன்னுடன் மாமி நாத்தி
அனைவருங் கூடி அன்பொடு வாழ

59007

11 மனமதில் நினைந்தால் மனையிடத் தேதான்
தினமவர் தங்கள் செயலிற் சொல்லில்

12 குற்றங் கண்டால் குறைகூ றாமல்
செற்ற மடக்கிச் சிறிதும் வெறாமல்

13 கண்ணுற் கண்டதைக் காலால் தள்ளி
மண்ணால் மறைத்து மறந்து விட்டுக்

14 கணவ னுடைய காதிற்போ டாமல்
குணமா யவரொடு கூடிப் பேசிக்

15 கர்த்தாவை யெண்ணிக் கௌரவங் காத்து
மெத்தவுஞ் சாந்தம் மேவிட வேண்டும்.

அத்தியாயம்-11.

சண்டைக் கிடமின்றி நடத்தல்.

1 காதுடன் கைகால் கண்களிவ் விரண்டா
நீதியா வளித்த நிர்மலன் நமக்கு

2 ஓதும் வாயோ ஒன்றே யளித்த
ஏதுவை யெண்ணி ஏந்திழை யென்றும்

3 அவசிய மின்மொழி அதனை யொழித்துப்
பவம்விளை யாத பான்மைய தாகப்

4 பேசிடல் வேண்டும் பிழையறும் வகையே
ஏசிடல் தகாதே என்றுமென் றறிந்து

5 கூசிட வேண்டும் குறைபிறர் மேற்சொல
நேசமே யிதனால் நீடிடும் நிலத்தில்

6 மாசிலாச் சத்தியம் மனமுவந் துரைக்கும்
ஆசிபெற் றவளே அரிவை சிரோமணி

7 இன்னா ரின்னார் இப்படிச் செய்தார்
சொன்னா ரிப்படிச் சொல்லல் தகுமோ

8 மூன்னா ளிவரிது மொழிந்தன ராதலால்
என்னா வின்று இயன்றதைச் செய்வேன்

9 சும்மா விருக்கச் சும்மா விருக்க
எம்மாத் திரமென் றெணேநினைக் கின்றார்

10 அம்மா இவர்களை அப்படி விட்டால்
தம்மா லானதைத் தணியாது செய்வார்

11 என்று சண்டைக் கெவரொடு மெழுதல்
நன்றல நன்றல நங்கையர் தமக்கே

12 வீணான பேச்சில் விளைவது சண்டை
ஆணான பேர்களு மதனிடைப் பட்டுப்

3 பாணா வீசிப் பலபோர் தொடுத்து
டாணாக் காரர் டவுன்போ லீசில்

14 நெட்டித் தள்ள நேருவ ரிதுதான்
பட்டிப் பெண்கள் பான்மையால் விளைவதே

15 வாய்ப்பேச் சதனல் வம்பு விளைந்துயிர்
மாய்க்கவும் ஏது வருவத னலே

16 பேச்சைச் சுருக்கமாப் பேசுவ தன்றி
மீச்சொல் வழங்கலை விடுத்திட வேண்டும்

17 பெண்கள் கூடிப் பேசுவ தாலே
மண்ணதில் பாவம் வளருவ துடனே

18 எண்ணம் பலவாம் எழிலது குறையும்
விண்ணிடை யமரர் வியசன மடைவார்

19 கண்ணிற் காணாக் காரியந் தனையும்
பெண்களிற் சிலபேர் பேசுவர் மெய்போல்

20 பெரியோ ருரைக்குமிப் பெற்றிபொய் யன்று
அரியநற் குணமுறும் அரிவையர் பாலும்

21 கரிய மனமும் கடும்பகை யியல்பும்
சரியிலா நீதியுஞ் சார்ந்திடு மாதலால்

22 நங்கை மாரிந் நாளில் கூடிச்
சங்கஞ் சேர்வது தக்கதன் றாமே

23 செங்கரம் வருந்தச் சேயிழை யில்லில்
தங்கியே யுழைப்பது தக்க தாகும்

24 நாத்தி மாமி நவிலோ ரகத்திபின்
நேர்த்தியாம் நேயம் நினைத்திட லின்றி

25 வாட்டமா யவரொரு வார்த்தைசொல் லியவுடன்
ஓட்டமா யோடி உற்றதன் பதிக்குப்

26 பேசின பேச்சைப் பெரிய தாக்கி
யேசினா ரென்று எடுத்துக் கட்டிச்

27 சாத்தைக் கவிழ்த்துச் சிணுங்கி யழுதவன்
காத்தைப் பிடித்துக் கடிந்தே யிழுத்து

28 வந்துகே ளென்று வலுவந்தப் படுத்தி
முந்தி விடுத்தவன் முன்னே மூக்கைச்

29 சிந்திப் போட்டுத் தீப்பகை மூட்டிக்
குந்திப் புலம்பிக் குடும்பம்வே றாக்கிப்

30 பிரிவினை செய்யும் பேதைக் குணமுள
அரிவையர் இல்லினுக் காகா தவரே

அத்தியாயம்-12

நட்பாராய்தல்.

1 பெண்கள் முகத்தால் போல் அவர் குணம்
மண்மிசை விளங்க மாட்டா தாகையால்

2 நண்பரென் றுடனே நண்ணிடா தவரைக்
கண்ணால் பார்த்துக் கவனித்துச் சிலநாள்

3 நண்ணிப் பின்னர் நல்வார்த்தை யாடி
எண்ணி யவர்சொல் எழிற்செய லெல்லாம்

4 நாடியா ராய்ந்து நற்குண மவரிடம்
கூடி யிருப்பது குறிப்பா லுணர்ந்தவர்

5 புண்ணிய மிகுந்து பொறுமையுந் தாங்கிக்
கண்ணிய மிகுத்த காரிகை யாரெனில்

6 கலந்துற வாடக் கருதலா மவருடன்
நிலந்தனிற் றீயர்பால் நெருங்கிடல் தீதே.

அத்தியாயம்-13.

தெய்வபக்தி.

1 உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினமதைத்
தள்ளிப் பொறையினைச் சந்ததந் தாங்கிப்

2 பத்தியாத் தெய்வப் பலநாம மெடுத்துச்
சுத்தபா ராயணம் சொல்லத் தொடுத்து

3 நத்தி யுருக்கமாய் நவின்று முடித்துச்
சத்தி தரப்பான் தாளிணை யடுத்து

4 முத்தி கொடுக்கும் முயற்சியை மனதில்
நித்தமேற் கொள்வது நேரிழைக் கழகே.

5 நல்லனே ஈசனே நவிலுசர் வேசனே
வல்லனே நேசனே வானுறை பாசனே

6 ஆபத் பாந்தவா அநாத ரக்ஷகா
தாபத் தையொழி தயா பவக்ஷயா.

7 கோபத்தை யடக்கக் குணமருள் தாதா
பாவத்தைத் தீர்க்கும் பராபரப் பொருளே

8 எம்பெரு மானே இறையே துரையே
எம்மருங் கோனே என்னையாள் வோனே

9 தருணோப காரா சர்வாதி தேவா
கருணா முகிலே கலாநிதித் தெருளே

10 அருட்கட லோனே அரும்போ ஷகனே
திரியேக பரனே ஜெகதீ சாநமோ

11 பரிவா யெனவிப் பாரா யணத்தைச்
சரிவர வோதும் தையலே அணங்காம்.

அத்தியாயம்-14.

வியபிசாரத்தின் தீமை.

1 ஒலை வந்தது உடனே வரச்சொலி
வேலை யாக வெளியூ ருக்குக்

2 காலை நேரம் கட்டாய மாகச்
சாலை மார்க்கந் தான்புறப் படுவேன்

3 வாலப் பெண்கள் வந்தா லங்கே
சாலச் சங்கடம் சாரு மெனப்பதி

4 நத்திய வோரூர் நாடிப் பயணம்
வைத்துத் தனது மனவிருப் பதனைச்

5 சொல்லும் பொழுதே சோர்ந்து விழுந்து
கல்லும் கரையக் கசிந்தே யழுது

6 உன்னை விட்டு ஒருக்ஷண மிருக்க
என்னு வியலா தென்னையழைத் தேகுவாய்

7 என்றனைத் தனியே இருத்தி விட்டு
உன்ற னலுவலா யுகந்து போனல்

8 எப்படி நானிங் கிருப்பே னெனது
செப்பருங் கற்புச் சீர்குலைந் திடுமே

9 என்றே தலைவன் ஏகின பின்னர்
தென்பாய்க் கள்ளச் சிநேகித னோடு

10 அன்பாய்க் கூடி ஆடிப் பாடி
இன்பா யிருப்பவ ளெய்துவாள் நரகே

11 கணவ னில்லாக் காலந் தன்னில்
அணிபணி சூடி அலங்கரித் திடுதலும்

12 ஆடிப் பாடி ஆனந் தித்தலும்
கூடிப் பிறரொடு கூவி நகைத்தலும்

13 நீடிச் சுகமாய் நித்திரை செய்தலும்
தேடி நல்லூண் தீங்கனி தின்றலும்

14 நாடி வாசனை நறும்புகைப் படிதலும்
வாடிடா முகத்தில் மைப்பொட் டிடுதலும்

15 கோடிய மங்கை குணமா கும்மே.
பீடிலா இவள்தான் பெரும்பே யாமே.

அத்தியாயம்-15.

பரத்தையை நாடும் கணவனைத் திருத்தும் உபாயம்.

1 கணவ னானோன் காதல்வே றாகிக்
கணிகை யாளைக் கருதும் வேளை

2 அணிநிறை பத்தினி அடுத்துநோன் பிருந்து
துணிவுறு வரமுறச் சொல்தவ மியற்றிக்

3 கடவுளை நோக்கிக் கண்ணீர் சொரிந்து
திடமுடன் பதியெதிர் செழிப்புங் களிப்பும்

4 உடையவ ளாக உடைபணி யிலங்க
நடைசிறந் தவளாய் நகைமுகங் காட்டிப்

5 பரிவுறப் பேசிப் பரத்தையின் மேலாம்
சரச முடனத் தலைவனைக் கூடித்

6 துறந்திடத் தக்க துஷ்டவே சையையவன்
மறந்திடச் செய்பவள் மாநிலத் துத்தமி.

அத்தியாயம்-16.

மெய்யின் உயர்வு.

1 புருஷ னிடத்தில் பொய்யது பேசும்
தெரிவை யானவள் தெய்வ மஞ்சாள்

2 விரதமாய்ப் பதிபால் மெய்யே பேசுவாள்
அரிதா யபத்தமும் அறைந்திட வறியாள்

3 திகழும் வாய்மை செறிந்தநா யகியே
இகமதி லிவட்கே யிசைமிக லாகும்.

அத்தியாயம்-17.

நன்மனையாள் இயல்பு.

1 மனைவி குணமினும் வழுத்தக் கேண்மோ
நினைவா னதிலெந் நேரமுங் கணவனை

2 மகிழச் செய்யும் வகையை யெண்ணித்
திகழ நிறைபொறை தீஞ்சொல் வாய்மை

3 பத்தியும் தேவ பயமும் அகத்தின்
சுத்தியும் வேலையில் சுறுசுறுப் புடனே

4 நத்தியே தினம்வரும் நல்விருந் தோம்பிச்
சித்த முடனே தேசிகர்க் குதவிப்

5 புதல்வரை யீன்று புண்ணிய நெறியில்
நிதமும் நடப்பவள் நேர்மனை யாளே

6 அறிவ தறிந்து அஞ்சுவ தஞ்சி
முறிவது முறித்து மூடுவ மூடிச்

7 செய்வது செய்து சிறந்த வாறே
உய்வகை உய்ந்து உள்ளது கொண்டு

8 இன்புற்று வாழும் இயல்புடை யாரே
துன்புற்று வாழும் துயரடை யாரே

9 என்று தெரிந்து இசைந்தவிந் நீதியில்
நன்று பொருந்தி நடப்பவள் உத்தமி

10 உற்றோர் மீதுயர் உண்மை நேசமும்
மற்றோர் மீது வளர்பரி தாபமும்

11 தருகுணங் கொண்டு தயவு மிகுந்து
வருவிருந் தோம்பி மனையினைக் காத்துப்

12 பொறுமையும் வாய்மையும் புகழ்பெறக் கொண்டு
வறுமைத் துன்பம் வல்லிடை யூறு

13 சிறுமை பலவும் ஜெயமுடன் தாங்கி
வெறுமை யான வெளியலங் காரம்

14 வீணென நம்பி விரும்பிமெய்ந் நிலையைக்
காணரும் மறுமைக் காட்சியும் களிப்பும்

15 பூணரும் மாட்சிப் புண்ணியக் கிரியையும்
கோணிடா நேர்மைக் குவலய மதிப்பும்

16 நாணிடா வெகுளியை நலமுடன் அறுத்தலும்
ஊணுடை மணிபணி உலகப் பொருளமேல்

17 வீணுறு முவகையை விலக்கலுங் கொண்டு
சேணுறும வகையைச் சிந்தித்துக் கணவனைக்

18 காண்டொறும் கடவுளைக் கண்டதா வெண்ணி
மாண்பெறு வகையே வந்திப்பாள் குணவதி.

அத்தியாயம்.-18

கெட்ட மனைவியின் இயல்பு.

1 பொருளை விரும்பும் புன்மதித் தாரம்
புருஷனை மதியாள் புகலு மவன்பணி

2 சரிவரச் செய்யாள் சண்டைக்குச் சலியாள்
பாபூ மான்கள்மேல் பட்சம் வைப்பாள்

3 கோபம்பொய் வஞ்சம் கொலைகள் வேளைய
பாவ மேற்றுப் பஞ்செனச் சுழல்வாள்

4 சாப மஞ்சாச் சண்டாளி யிவளே
நாபியென் றிவளை நவில லாமே

5 இல்லா ததையே இட்டுக் காட்டிச்
சொல்லா ததையும் சொன்னு ரெனப்பிறர்

6 ஒன்று மொழிந்தால் ஒன்பதா முடிந்து
நின்றே பதியிடம் நேசங் குலைத்துச்

7 சண்டை யிடவே சமர்த்தாய்ப் பேசும்
கொண்டை யுடையாள் கொலைக்காரி யாவாள்

8 கறையறக் கண்ணுல் காணுப் பொருளைக்
குறையறக் கூறக் கொள்ளாப் பேச்சைப்

9 பொறியுற வெண்ணிப் புறங்கூறும் தோஷியும்
பிறருரை கேட்கும் பேதையும் பதரே

10 சொல்லுக் கஞ்சாச் சொரிகுழல் கணவன்
மல்லிட வாய்ந்த மட்டி ஜென்மம்

11 வல்ல கம்படி வாங்குவா ளிவளே
இல்லறப் பாக்கியம் இவட்கெய் தாதே

12 கணவன் சொல்லைக் கடந்திவள் பேசிச்
சினமிக வம்பில் சிக்கிக் கொண்டு

13 ஊமாய்க் கணவன் உதாசினம் பேசத்
தரமறி யாமல் தவிப்பவ ளாவாள்

14 புருஷனை மீறிய புரையத னுலே
வரிசை குலைய வாடுவாள் மங்கை

அத்தியாயம்-19.

இல்லறம் நடத்து மியல்பு.

1 பத்தாவுக் கேற்ற பதிவிரதை யானல்
எத்தானுங் கூடி இருக்கலா மன்றி

2 ஏறுமா ருக இயற்றும் மனைவி
கூறுநல் வாழ்வு கொள்ளா தொழிவாள்

3 வண்டியில் பூட்டிய வல்லெரு திரண்டும்
சண்டியா யிருந்து சண்டை யிட்டு

4 ஒன்று முன்னும் ஒன்று பின்னும்
சென்று பிணங்கின் திகைத்தே வண்டி

5 நின்று விடுமந் நேர்மை போலே
என்று மிருவரும் இசைந்து நடந்து

6 நன்ருெழு காவிடில் நல்லில் அறமெனும்
வென்றிச் சகடம் வீணே நின்றுபோம்

7 அன்றே அறங்கெட அகதியே யாகும்
என்றே யறிந்திங் கிணைந்துதம் பதிகள்

8 மன்றற்போ தற்ற மனமே கொண்டு
துன்றிய நேசம் தொடர்ந்துடன் வாழ்க.

அத்தியாயம்-20.

விகாரமாதின் இயல்பு.

1 புருஷ ஞன பூமா னுடைய
சரீரந் தன்னில் சௌக்கியக் குறைவு

2 வாவத் தருணம் மனைவி தனது
விரகந் தன்னை விட்டொழிக் காது

3 தேக சுகத்தைத் தேடி யடையப்
போகத்தை விரும்பும் புத்தியா லேசை

4 யோகமா யிருக்க யோசனை கொண்டு
தாக மடைந்து தன்னறி விழந்து

5 உரிய நாயகன் உயர்வும் மதிப்பும்
அரியதோ ரன்பும் அனைத்தையும் மறந்து

6 ஈர மில்லா ஈன மனேனும்
சோர புருஷனைச் சுகிக்க வெண்ணில்

7 சேரும் பாபம் தெய்வ சாபம்
ஆரு மிவள்தான் அவனி யோர்கள்

8 தூறும் குறையுந் தூக்கியா யாது
கூறு கெட்டுக் கூடுவாள் நரகே.

அத்தியாயம்-21.

பிள்ளைகளை வளர்த்தல்.

1 புத்திரர் நல்லார் பொல்லா ராதல்
நத்துதாய் தந்தையர் நடக்கையா லன்றி

2 அவரவ ரமைப்பென் றறைவது பிழையே
விவர மறியா விதமுடன் பிறந்தோர்

3 நன்னெறி படர நற்றுணை யாவதும்
புன்னெறி சேரப் புகல்சார் பாவதும்

4 தந்தையுந் தாயும் தாமெனச் சாற்றுப
இந்த நெறியை ஏற்றதாய் தந்தையர்

5 கவனத்தில் வையாக் காரணத் தாலே
புவனத்திற் சேய்கள் பொல்லா ராவார்

6 கவலை வைத்துக் காத்த லாலே
இவணுல மேலோரென ஏற்ற மடைவார்.

7 சொல்லும் மக்கள் தோழமை நல்லதாய்
வல்லபெற் றோர்கள் மதித்துச் சேர்த்திட

8 வேண்டும் அன்றேல் விலையிலாப் புதல்வரை
ஈண்டு வீணே இழப்பார் சிறுவர்

9 நல்லா ரோடு நண்ணுத லின்றிப்
புல்லிய ரோடு புழக்கம் செய்தால்

10 பொல்லா ராகிப் புவியினிற் கல்வி
கல்லா ராகிக் கவலுவர் வீணே.

11 நறுமணம் போலும் நன்னடை யுடைய
சிறுவரைப் பார்க்கிலும் சிறந்த பொருளும்

12 மறுமைக் குதவும் மாண்புறு முயிரும்
பொறுமை திகழும் பூமியி லிலைபால்

13 ஐயுற நல்வழி அவர்களை நடாத்தல்
மெய்யறி வுடையோர் மிகுசெய லென்ப.

14 மக்கள் தமக்கு மதலைப் பருவம்
புக்கிடு முன்னே போதித்தல் வேண்டும்

15 போதனை யோடு புகழ்க்குரு வாயினால்
சாதனை நல்லன தாமசெயப் பணித்துப்

16 பக்குவ தேவ பயமதை யூட்டித்
தக்கவர் லட்சணம் தன்னைப் புகட்டிச்

17 சிக்கற நன்மை சித்தத்தி லுணர
மிக்கவிவ் வுலகம் வீணென் றறியத்

18 துக்கமும் மகிழும் துன்னிடு முயிர்களின்
அக்கமும் பொருளும் ஆக்கையும் இளமையும்

19 நிலையா வென்பதை நினைத்து நன்னெறி
விலையிலாப் புண்ணியம் விரும்பிடச் செய்க.

20 தக்க நேரம் சார்ந்தபோ தெல்லாம்
சிக்கெனப் பற்றிச் செல்வர் நன்னெறி

21 புக்கிட மதிநிதம் போதித் தவரை
மிக்கவ ராக்கி விடுவது மன்றியம்

22 மக்கள் நல்ல மார்க்க மடைய
அக்கறை யுடனே அருங்கதை யாலும்

23 சமய யுக்தி சார்ந்திடச் செய்வது
அமையுநற் றந்தைதா யானவர் கடனே.

24 போதனை யாலே புத்திரர் மதியின்
மாதிரி தானே வலியதா கும்மே.

25 மாதிரி மிக்க வன்மைய தெனினும்
போதனை யின்றேல் புத்தி வாராதே

26 புகலுவ தொன்றும் புரிதொழி லொன்றுமாய்
இகழ்வுட னவர்கள் இலகுவ ரிங்கே.

27 பால ரானோர் பழகநன் னெறியில்
சால வருத்துதல் தகுதி யன்றும்

28 ஆசை வைத்து அவர்கள் மீது
நேசங் காட்டி நித்தலும் நன்மையாம்

29 அரிய நெறியில் அவர்கள் பழகிப்
பிரியமாய்ச் செல்லப் பெரிது மியற்றிச்

30 சரியாம் நண்பரின் சார்பு மேற்படப்
பரிவினிற் செய்து பற்பல நாளும்

31 கூடி யவருடன் குலாவி நடக்க
நாடி யவர்நெறி நயந்து பிடிக்கப்

32 பற்பல வெகுமதி பரிந்து புரிந்து
கற்பனை வழியில் காதலாய் நிற்கச்

33 சற்பனைக் காலம் தகுந்த திடனுற
விற்பன நூல்களின் விதிகளைக் காட்டிச்

34 சொற்பவாழ் வியல்பும் சுருதிப் பயன்களும்
அற்ப மேனும் அறிந்திடச் செய்க.

35 வாரி யெடுக்க வளருஞ் செல்வம்
கோரி யெடுக்கக் குறையாச் செல்வம்

36 தீயால் வேகாத் திருடர் கொள்ளாப்
பேயால் வெளவாப் பிறரால் கவரா

37 வளமுறு செல்வம் மதிமிகு திரவியம்
உளமகிழ் கல்வியே உலகி லாதலின்

38 ஊட்டி வளர்த்த உரிய புதல்வரை
மேட்டிமை யான வித்தகக் கல்வியில்

39 பொருந்த நாட்டிப் புகழ்பெறு மாறு
வருந்திச் செய்வது வளர்ப்போர் கடனே.

40 செல்வ மென்னும் சீலத் தோடு
கல்வி சேர்த்தோர் களஞ்சிய மாக்கிப்

41 புல்லோ ரஞ்சிப் புறமே போக
நல்லோர் நாளும் நண்புற நயந்து

42 எல்லோ ராலும் ஏற்ற மதிப்புற
வல்லோர் போற்ற மண்டல மீது

3 புகழைத் தாங்கிப் போகம் ஓங்கி
மகிழைப் பெறும்விதம் மைந்தர்க் கியற்றுக

44 சிறுவர் குற்றம் செய்த காலை
வெறும்விளை யாட்டென விட்டு விடாமல்

45 பொறுமை கொண்டு பொறுத்து விடாமல்
உறுவினைப் பயனை உணர்ந்திடக் கூறிச்

46 செறிபழி திரும்பச் செய்யா திருக்க
அறிவுரை யவர்கட் கறைந்திட வேண்டும்.

47 அறம்புகல் பருவம் அடுத்த போது
மறதி யின்றி மதியுரைத் திடலாம்;

48 திறமதி தன்னைச் செப்புங் காலம்
உறுமிது வலவென் றுன்னுதல் தகாது.

49 நெறியினில் நிறுத்தும் நிலையினை விட்டால்
மறுமுறை மைந்தரை வருத்த நேரும்.

50 சிட்சை தொடங்கிச் சினத்துச் சீறல்
பட்சங் குறைத்தல் பகருதல் வன்மொழி

51 தட்சணம் அகற்றல் தரையிற் கிடத்துதல்
பட்சணம் பறித்தல் பணியுடை கழற்றல்

52 பழங்குற்றம் கூறல் பாரைப் புகழ்தல்
முழங்காலில் இருத்தல் மூலேயில் நிறுத்தல்

53 உடையணி யோடு ஊண்முதல் ஒடுக்கல்
தடைபல புரிதல் தயவதை விடுத்தல்

54 காண வைத்துக் கலந்தா ணுண்ணுதல்
நாண வைத்து நல்லுடை பூணல்

55 பிறம்பால் அடித்தல் பிரியம் முறித்தல்
கரம்பெறு புதல்வர்பால் காட்டுதல் தகாது.

56 வரம்பு கடந்து மைந்தரை யடக்கின்
வரம்பெறு மக்கள் மாறுபா டுறுவர்.

57 சேயர் தமக்குத் தேடிவைத் திடுபொருள்
மாவிரு செல்வ மாட்சி யுடனே

58 சீலம் ஒழுக்கம் சிறந்த கல்வியும்
தாலம் புகழும் தருமமு மிசையுமாம்.

59 மறுமைக்குத் துணையாம் மறக்கொணுத் தவமும்
வறுமை நிந்தை வாரா தகற்றலும்

60 பொறுமை தாழ்மை புண்ணியப் பேறும்
சிறுவர்க் கெய்தச் செய்வத னேடு

61 தெள்ளிய வறிவும் தேவ பயமும்
கொள்ள நிறைத்தல் குரவோர் கடனே.

62 மருந்து தின்றும் மக்களைப் பெறுதல்
திருந்துமில் லிற்குச் சிறந்த வழகே.

63 மைந்தர் தம்மை மடியினில் வைத்து
எந்தை நினைவவர்க் கின்பா யூட்டுக.

64 நற்குண நற்செயல் நாடிட வென்று
சிற்சில கதைசொலித் தேற்றுக வவரை

65 துற்குண முள்ள தோழரிற் பிரித்துச்
சற்குண நேயர் தம்மொடு கூட்டுக.

66 மக்களால் நற்பயன் வருதற் கவரைச்
சிக்கென நல்வழிச் செலுத்தல் வேண்டும்.

67 பெற்றோர் ஒழுக்கம் பிழையறச் சொல்லி
நற்றவ மைந்தரை நடத்தல் வேண்டும்.

68 சொல்லுரைக் கடங்காச் சுந்தரப் புதல்வர்
தொல்லுல கிருத்தல் தொந்தரை யாமே.

69 தலைவன் தலைவி தாமொரு மித்து
நல்வழி மக்களை நடத்தல் வேண்டும்.

70 மக்களை யவர்கள் மனம்போல் விடாமல்
தக்கவா றடக்குதல் தகும்பெரி யோர்க்கே.

71 மிக்கதீ மைந்தர் விரும்பிடும் வழியே
புக்கிட விடுவோர் புதல்வரை யிழப்பார்.

72 உற்றதோர் கர்வம் உறுபிடி வாதம்.
அற்றிட மைந்தர்க் கன்னத்தைச் சுருக்க.

73 மக்கள் செந்நெறி வதிய விரும்பின்
பக்கத் திருந்தவர் பார்த்திட நிதமும்

74 முக்கிய மாக முயன்று பெற்றோர்
தக்க நற்குணம் தரித்தல் வேண்டும்.

75 தெய்வ பயமது சிறிது மில்லாச்
செய்கை யுடையார் ஜெகத்தினில் வயிறு

76 நையப் பெற்ற நவையுறு மக்கள்
உய்வ தருமை யோதிடு மவர்கள்

77 கண்டோர் வெறுக்குங் கசட ராவார்.
நன்றிவ ராலே நண்ணுவ திலையால்

78 மக்கள் மனமது வளமுறு மெழுகும்
புக்க வுருவமை புகைப்பட மும்போல்

79 காண்பது பதியும் காட்சித் தாதலின்
மாண்புறு மக்கள் மனதிற் கெதிரில்

80 நன்னடை காட்டி நடந்திட வேண்டும்
இந்நில மீதி லிசைந்தபெற் றோரே.

81 புதல்வர் கையில் பொருளது சிக்கா
விதமே காத்தல் வேண்டும் பெரியோர்.

82 பிள்ளைகள் நன்னெறி பிசகிய போது
தள்ளை தந்தை தகுந்த புத்தி

83 மெள்ளவே யவர்க்கு விருப்பமா யோதி
வெள்ளை மதியை விலக்கிட வேண்டும்.

84 சிறுவரைப் பேணித் தெய்வ பயமதை
உறுதியா யவர்கட் குபதே சித்து

85 நேர்த்தியாம் தோழரை நிதமும் சேர்த்துப்
பூர்த்தியா நற்குணம் போத வமைத்துக்

86 குறித்தநற் செயல்களைக் கொளுத்தியா தாவாய்ச்
செறித்துத் துன்மதி சீர்படத் திருத்திப்

87 பாப மஞ்சவும் பலரும் புகழவும்
கோப மடக்கவும் குரவரைப் பணியவும்

88 கல்வியும் சீலமும் கலந்தொளி தாவே
செல்வரை வளர்ப்பவள் ஜெயமுறுந் தாயே.

அத்தியாயம்-22.

மாதர் தீச்செயலால் அவர் குலத்தார்க்குப் பழிப்புண்டாகு மெனல்.

1 அற்பத் திருட்டால் அனுசிகர் பொய்யால்
சொற்பப் பகையால் சூதுவஞ் சனையால்

2 பேசுதீச் சொல்லால் பிழைபடும் செயலால்
வீசுமோர் வகையால் வெகுளித் தனத்தால்

3 பொறையடக் கத்தில் புன்குறை வதனல்
நிறைகெடுந் தன்மையால் நிசித குணத்தால்

4 சதியெனும் மனைவி தான்கெடு வதனால்
பதிமுதல் பெரியோர் பழியினை யடைவார்.

5 மாதரா லிப்பழி வாய்ப்ப தாலே
ஆதர வில்லாள் ஐம்பொறி காத்துத்

6 தன்னிஷ்டப் படியே தானடக் காமல்
உன்னி மனத்தை யொடுக்கி நாளும்

7 முன்னவ னினைவை முழுதும் வகித்து
இன்னருட் பெரியோர்க் கென்று மடங்கிக்

8 கருத்தினில் நீதி கண்ணியே நடந்து
உருத்திகழ் குலத்தார்க் குயர்வுண் டாக்குக.

அத்தியாயம்-23.

மாதர்க்குறுதிமொழி.

1 பாபுருஷன்னெதிர்ப் பட்டா லுடனே
சிரமது குனிந்து தெய்வத்தை யெண்ணிச்

2 சிந்தையப் பிறன்பாற் செல்லா தகன்று
வந்திட வேண்டும் மண்டலத் தொருவன்

3 அழகும் பொருளும் அன்புறு பேச்சும்
பழகும் குணமும் பண்புறு நகைப்பும்

4 சரசச் சொல்லும் தருசல் லாபமும்
அரசமா தரையும் அசைத்திடு மதனல்

5 கற்பணி பத்தினி கவனத்தோ டிவைகளைப்
பற்பல வகையிலும் பற்றற நீக்குக.

6 நீக்கிடும் வகையது நிகழ்த்திடக் கேண்மோ
யாக்கையும் இன்பமும் யாவும் நிலையல

7 போக்கிடும் தீச்செயல் புகழ்மதிப் புயர்வும்
யோக்கிய மழிக்கும் யுகமெலாம் நிற்கும்

8 தூக்கிடச் செய்யுந் துன்பமா மிதனல்
தீக்குழி மறுமையில் சிந்திப்ப துண்மை

9 எங்கு மிருப்போன் எல்லா மறிவான்
இங்கவ னையும்நாம் ஏய்த்திட லாமோ

10 என்றிவை யாவும் எண்ணி யெண்ணிக்
குன்றி மனமது குலைந்து வெறுத்து

11 மன்றல் செய்த வானுக் குப்பழி
ஒன்று இருக்க உறுதியாய் நடக்க.

அத்தியாயம்-24.

மோக்ஷ மார்க்கம்.

1 மண்ணுறு வோர்கள் மாறுமோக்ஷம்
நண்ணிடும் வகையை நவிலக் கேண்மோ

2 ஐம்பொறி காத்து ஐயனைப் பணிந்து
ஐம்புல னடக்கி அறிவினைத் துலக்கிப்

3 பாதக மேழும் பறித்துள மதனில்
வேதகற் பனையை விரும்பி யடுத்து

4 எம்பிரான் பாதம் இசைந்தவர் சேவை
தம்ப மெனவே சந்தத மெண்ணி

5 நேசங் கொண்டு நினைவினை யொடுக்கி
வாசஞ் செய்துபூ வாழ்வை வெறுத்து

6 ஈசனின் தியானம் என்னுமோ ருசித
பாசமே கொண்டு பந்த மகற்றில்

7 பற்றிரண் டறுத்துப் பக்குவ மௌனம்
முற்றினு லின்ப மோக்ஷவீ டுறுமே.

(முற்றிற்று.)

அரும்பத விளக்கம்.

பக்கம்-1.

செல்வியர்-பெண்கள்.
நியதி-செய்யத்தக்க கடமைகள்.
மணந்த-கலியாணஞ்செய்த.
பூவையர்-பெண்கள்.
ஒழுக்கம்-நன்னடக்கை.
தெருளுற-தெளிவாக.
அமலன்-கடவுள்.
உபயம்-இரண்டு.
மரு-வாசனை.
கழல்கள்-பாதங்கள்.
பொறை-பொறுமை.
மின்-மின்னல்.
புரை-நிகர்த்த.
சென்னி-தலை.
உன்னி-நினைத்து.
உகந்து-சந்தோஷித்து.
தூயவன்-பரிசுத்தமானவன்.
நத்தி-விரும்பி.
நறு-நல்ல.
தலைவியர்-மனைவியர்.
தலைவன்-கணவன்.

பக்கம் 2.

வகித்தோன்-தாங்கியவன்.
காதலி-மனைவி.
பதி-கணவன்.
இல்-வீடு.
பேணி-பாதுகாத்து.
நாளும்-தினந்தோறும்.
நுடங்கிய-தளர்ந்த.
தாங்கிடும்-தூக்கிப் பாதுகாப்பான்.
உன்னதம்-உயர்வு.
பணி-ஆபரணம்.
துகில்-ஆடை.
அல்-இராத்திரி.
தென்பு-தைரியம்.
அரண்-காவல்.
பண்பு-குணம்.

பக்கம்-3.

பாரியாள்-மனையாள்.
சீரிய-சிறப்பான.
நிலவிடும்-விளங்குகின்ற.
கனை-சப்திக்கின்ற.
கழறுதல்-சொல்லுதல்.
சதி-மனைவி.
மதி-அறிவு.
மகிபதி-பூமிக்கரசன்.
அதிபதி-தலைவன்.
இப்படி-இந்தவுலகம்.
நனி-மிகவும்.
கொழுநன்-கணவன்.
பணி-வேலை.
குலமகள்-உயர்குலத்திற் பிறந்த பெண்.
ஆய-ஆகிய.

பக்கம்-4.

புடவி-உலகம்.
பிணக்கு-மாறுபாடு; மனச் சடைவு.
இல்லறம்-வீட்டின் தருமம்.
கடன்-கடமை.
மனை-மனைவி.
சந்ததம்-தினந்தோறும்.
உவந்து-சந்தோஷித்து.
ஒருமித்து-ஒன்றுபட்டு.
துகள்-குற்றம்.
நடாத்தல்-நடத்தல்.
எழில்-அழகு
மேற்கதி-உயர்ந்தபதவி.
மேவி-அடைந்து.
பழுது-குற்றம்.
பதியினில்-ஊரில்.
தம்பதிகள்-புருஷனும்மனைவியும்

கண்ணி-பொருந்தி.

பக்கம்-5.

உபகாரணம்-உதவி.
உவகை-சந்தோஷம்.
தெற்றென-தெளிவாக.
பூரிக்கும்-சந்தோஷத்தால் நிறையும்.
தொழும்பு-அடிமைத்தனம்; குற்றேவல்.
பிடி-பெட்டை யானை.
களிற்றை-ஆண் யானையை.
கடியா-கோபிக்காத.
விலைக்கன்னி-தாசி.
பிணிக்க-கட்டுக.
வெள்ளென-வெளிப்படையாக.
துணைவன்-கணவன்.
களிக்க-சந்தோஷிக்க.
பர்த்தா-கணவன்.
சூழ்தல்-ஆலோசித்துச் செய்தல்.
அளிக்கும்-கொடுக்கும்.
நிகழ்த்துதல்-சொல்லுதல்.

பக்கம்-6.

யோகமாய்-பொருத்தமாக.
புல்லிட-சேர.
தொல்-பழமை.
இல்லாட்கு-மனைவிக்கு.
இறைவன்-கணவன்.
நித்தலும்-தினந்தோறும்.
கேண்மோ-கேட்பாயாக.
குலவிடும்-பொருந்தும்; கொண்டாடும்.
மகிழும்-சந்தோஷமும்.
மாசில்-குற்றமில்லாத.
பாசம்-அன்பு.
ஆசு-குற்றம்.
நிதி-பொருள்.
தாரணி-பூமி.

பக்கம்-7.

குலவுதல்-பிரகாசித்தல்.
பீடு-உயர்வு.
உறுப்பு-அவயவம்.
ஈட்டி-சேகரித்து.
இருநிதி-மிகுந்தபொருள்.
ஈண்டு-இங்கே.
மின் அணி-பிரகாசிக்கும் ஆபரணம்.
இல்லக்கிழத்தி-வீட்டிற்குரிய மனைவி.
ஆர்வலன்-அன்புள்ளநாயகன்.

பக்கம்-8.

மாசிலா-குற்றமில்லாத.
காசினி-பூமி.
செருக்கு-அகங்காரம்.

பக்கம்-9.

பாவையர்-பெண்கள்.
அமர்-சண்டை.
வதுவை-கலியாணம்.
சதிபதி-மனைவியும் புருஷனும்.
பதிகளில்-நகரங்களில்.
அந்தரங்கத்தில்-மனதிற்குள்.
வதிந்த-தங்கிய.
பான்மை-தன்மை.
தலமதில்-பூமியில்.
மருவுதல்-சேருதல்.
துன்பு-துன்பம்.

பக்கம்-10.

கடி-வாசனை; காவல்.
மிடி-துன்பம்.
அவனி-பூமி.
அரிவை-பெண்.
பதி அகம்-புருஷன் வீடு.
உறைந்திடா-தங்காத.
அகத்துழி-வீட்டினிடம்.
மன்னிய-பொருந்திய.
அகத்தில்-மனதில்.

அலைத்திடாது-வருத்தாமல்.
திதி-சந்திரன் நாள்.
நலிய-வருந்த.

பக்கம்-11.

ஊனை-முற்செயல்.
அகமுடையான்-வீட்டிற்குரிய வன்; கணவன்.
தொடர்பு-சிநேகம்.
அநித்தியம்-நிலையற்றது.
தேட்டம்-சம்பாத்தியம்.
குரூபி-விகாரவடிவ முள்ளவன்.
சுரூபம்-நல்ல வடிவம்.
சுந்தரன்-அழகுள்ளவன்.
ஆர்ந்த-பொருந்திய.
பொற்குணம்-அழகிய குணம்.
அவற்போற்றுதல்-அவனைப் பாதுகாத்தல்.
ஏய-பொருந்த.
இயல்பு-ஏற்றது.
அனைத்தும்-எல்லாம்.
அவற்கே-அவனுக்கே.

பக்கம்-12.

மணந்தோன்-கலியாணஞ்செய்தவன்.
சீற்றம்-கோபம்.
வீட்டறம்-இல்லறம்.
ஆற்றுதல்-செய்தல்.
ஒவ்விய-பொருந்திய.
அவ்வயின்-அவ்விடத்தில்.
விள்ளும்-சொல்லும்.
விழைந்து-விரும்பி.
தாள்-பாதம்.
காதலி-மனைவி.
உய்வகை-பிழைக்கும்விதம்.

பக்கம்-13.

தற்பரன்-கடவுள்.
அவற்றொழுது-அவனைத் துதித்து.
பரவிழைவு-அன்னியர் ஆசை.
துப்புரவு-சுத்தம்.
இதயம்-மனம்.
ஆளன்-கணவன்.
வாளா-வீணாக.
கூற்றம்-எமன்.
எழில்-அழகு.
கழி-மிகுதியான.
வெகுளி-கோபம்.

பக்கம்-14.

குன்ற-கூச; குறைவுபட.
நையுற-வருந்த.
வெகுள-கோபிக்க.
பை-படம்.
ஐயுறும்-சந்தேகப்படும்,
மதியிலி-அறிவற்றவன்.
வையகம்-உலகம்.
இகம்-இவ்வுலகம்.
தியங்கிட-மயங்க.
அறுதி-முடிவு.
நைய-வருந்த.
வெகுண்டு-கோபித்து.

பக்கம்-15.

மாக்கள்-மனிதர்கள்.
அதோகதி-நரகம்
பாங்கு-அழகு.
தீரமாய்-தைரியமாய்.
வரிக்குமுன்-கலியாணஞ் செய்யுமுன்.
வரித்தபின்-கலியாணஞ் செய்தபின்.
நலிய-துன்பப்பட.
கலன்-ஆபரணம்.

பக்கம்-16.

சீயம்-சிங்கம்.
வழுத்தும்-சொல்லும்.
திகைத்திட-மயங்க.

மனைக்கிழத்திகள்-வீட்டிற்குரிய பெண்கள்.
நவலுவர்-சொல்லுவார்கள்.
உரியவன்-கணவன்.
வரிசை-கிரமம்.
நிரையாம்-வரிசையாகிய.
அணங்கு-பெண்.
ஆடவர்-புருஷர்.
உதவாத-கொடுக்காத.
நேரிழை-பெண்.
வாகிலா-அழகில்லாத.
போதம்-அறிவு

பக்கம்-17.

கண்டித-கண்டிப்பான.
பண்டைய-பழமையான.
மண்டிட-நெருங்கிய.
கறையற-அழுக்குநீங்க.
மசிய- தூளாக; நுண்மையாக.
பசப்புதல்-மயக்கல்.
சூட்சம்-தந்திரம்.
கூம்பின-மூடின.
நுவல-சொல்ல.

பக்கம்-18.

அற்புதம்-ஆச்சரியம்.
தற்சித்தம்-தன்மனம்.
மார்க்கம்-நல்வழி.
மூர்க்கர்-கொடுஞ்செய்கை யுடையார்.
என்ப-என்று சொல்லுவர்.
கணவனினீங்கி-புருஷனை விட்டுப்பிரிந்து.
படி-பூமி.
பவுஷு-வாழ்வு; சம்பிரமம்.
கடிது-வேகமாக.
துலங்கும்-விளங்கும்.
மீ[illegible]லாட்டி.
மரக்கலம்-கப்பல்.
இணைந்து-பொருந்தி.
ஊற்றினில்-ஆபத்தில்.
இடறுகள்-துன்பங்கள்.
ஏக-செல்ல.
துஞ்சுவாள்-இறப்பாள்.

பக்கம்-19.

மணமகன்-கலியாணமாப்பிள்ளை.
வறுமை-தரித்திரம்.
கிரகம்-வீடு
தரம்-உயர்ந்ததன்மை.
வரன்-கணவன்.
மறலி-எமன்.
மது-கள்.
குவலயம்-உலகம்.
இருசெல்வம்-பெரிய ஐசுவரியம்.
கறை-குற்றம்.
கனம்-உயர்வு.

பக்கம்-20.

நாரியர்-பெண்கள்.
சீரியர்-சிறந்தோர்.
திடனாய்-தைரியமாய்.
ஊண்-உணவு.
சோகம்-துன்பம்.
விருந்தோம்பல்-விருந்தினரை உபசரித்தல்.
காலன்-எமன்.

பக்கம்-21.

காய்ந்து-சினந்து.
கோட்பாடு-கொள்கை.
துறந்தவர்-சன்னியாசிகள்.
துவ்வாதவர்-தரித்திரர்.
வேட்டவன்-கலியாணஞ் செய்தவன்.
தேட்டு-சம்பாத்தியம்.
வீட்டகம்-வீட்டினுள்.
மன்னுவாள்-பொருந்துவாள்.
தெய்வமஞ்சி-தெய்வத்திற்குப் பயந்து.
அண்டை-சமீபம்.

பக்கம்-22.

சச்சரவு-கலகம்.
சால-மிகுதியாக.
தாலம்-பூமி.
ஏல-பொருந்த.
வயம்-வெற்றி.
அமைச்சன்-மந்திரி.
இயலும்-பொருந்துகின்ற.
எண்-கணக்கு.
பண்-சங்கீதம்; பாட்டு.
பரமன்-கடவுள்.
வண்ணம்-அழகு.
கீதம்-சங்கீதம்.
பாகம்-சமையல்.
அமைவது-பொருந்துவது.

பக்கம்-23.

சுற்றந்தழுவல்-பந்துஜனங்களோடு கலத்தல்.
உற்றோர்-உறவினர்.
முற்ற-முழுதும்.
சோதரர்-சகோதரர்.
பணியாளர்-வேலைக்காரர்.
வெருட்டி-பயமுறுத்தி.
தத்துவம்-புத்தி; அதிகாரம்.

பக்கம்-24.

தவ்வை-மூதேவி.
தொழும்பர்-அடிமைபட்டவர்கள்.
அணி-அழகு.
திணிசேர்-வலிமை பொருந்திய.
இல்லறத்தியல்பு-இல்வாழ்க்கையின் தன்மை.
வணமுடன்-அழகுடன்.
மூவகைமனிதர்-துறந்தார், துவ்வாதார், இறந்தார்.
சான்றோர்-பெரியோர்.

பக்கம்-25.

பொன்மகள்-இலக்குமி.
தனிநிதி-ஒப்பற்றபொருள்.

பக்கம்-26.

செற்றம்-கோபம்; பகை.
கர்த்தா-தலைவன்.
நிர்மலன்-கடவுள்.
ஏந்திழை-பெண்.
பவம்-பாவம்.
பான்மை-தன்மை.
ஆசி-ஆசீர்வாதம்; வாழ்த்து.
சிரோமணி-தலையிற்சூடும் இரத்தினம்.

பக்கம்-27.

நெட்டி-பிடித்திழுத்து; ஒதுக்கி.
பட்டி-வேசி.
மீச்சொல்-அதிகப்பேச்சு.
வழங்கல்-சொல்லல்.
அமரர்-தேவர்.

பக்கம்-28.

பெற்றி-தன்மை.
அரிவையர்-பெண்கள்.
பாலும்-இடத்திலும்.
சங்கம்-கூட்டம்.
சேயிழை-பெண்.
கடிந்து-கோபித்து.

பக்கம்-29.

நட்பாராய்தல்-சிநேகத்தை ஆராய்ந்து பார்த்தல்.
கண்ணியம்-உயர்வு.
காரிகை-பெண்.
கவர்ந்து-பற்றி.
பாராயணம்-நியமமாகப் படித்தல்
நத்தி-விரும்பி.
சத்தி-பலம்.

பக்கம்-30.

சர்வேசன்-எல்லாவற்றிற்கும் கடவுள்.
வானுறை பாசன்-வானில் தங்கும் விருப்புள்ளவன்.

ஆபத்பாந்தவா, ஆபத்துக்குதவும் பந்துத்துவ முடையவனே.
அநாதரக்ஷகா-ஆதரவற்றவரை இரட்சிப்பவனே.
தாபத்தை-துக்கத்தை.
தயா-தயையுள்ள.
பவக்ஷயா-பாவத்தைச் சிதைப்பவனே.
தாதா-அளவில்லாது கொடுக்கும் கொடையாளி.
பராபரப் பொருளே-கடவுளாகிய வஸ்துவே.
கோன்-அரசன்.
சர்வாதி-எல்லாவற்றிற்கும் முதலான.
கருணாமுகில்-கிருபை மழை சொரியும் மேகம்.
கலாநிதி-சாஸ்திரத்திற் கூறும் திரவியமே.
தெருளே-தெளிவே.
போஷகன்-ஆதரிப்பவன்.
திரிஏகபரனே-மூன்று தன்மைக்குரிய ஒரே கடவுளே; மூன்று தன்மை:—பிதா, சுதன், ஸ்பிரீத்துசாந்து.
நமோ-வணக்கம்.
பரிவாய்-இரங்குவாய்.
அணங்கு-தெய்வப்பெண்; அழகுள்ளவள்.
சாலே-ரஸ்தா.
வாலப்பெண்கள்-பாலியமாதர்கள்
சால-மிகுதியாக.

பக்கம்-31.

நத்திய-விரும்பிய.
தென்பாய்-தைரியமாய்.
நறும்புகைப்படிதல்-வாசனைப் புகையிற் சார்தல்; அதாவது, கூந்தல் முதலியவற்றில் வாசனைப்புகை யேற்றுதல்.
கோடிய-கோணிய; அதாவது நன்மார்க்கத்தை விட்ட.
பீடிலா-பெருமையில்லா.

பக்கம்-32.

கணிகை-தாசி.
அணி-அழகு.
பரிவு-அன்பு.
தெய்வமஞ்சாள்-கடவுளுக்குப் பயப்படாள்.
அறைந்திட-சொல்ல.
வாய்மை-சத்தியம்; உண்மை.
இசை-கீர்த்தி.

பக்கம்-33.

திகழ-விளங்க.
நிறை-கற்பு.
தேசிகர்-குருமார்.
உய்வகைஉய்ந்து-பிழைக்கும் வகையிற்பிழைத்து.
உற்றோர்-பந்துக்கள்.

பக்கம்-34.

ஓம்பி-உபசரித்து.
மறுமை-மறுஉலகம்.
மாட்சி-அழகு.
கிரியை-செய்கை; சடங்கு.
குவலயம்-பூமி.
சேண்-ஆகாயம்; அதாவது விண்ணுலகம்.
காண்தொறும்-பார்க்கும்போதெல்லாம்.
மாண்-பெருமை.
வந்திப்பாள்-வணங்குவாள்.
பரபுமான்கள்-வேறுபுருஷர்கள்.

பக்கம்-35.

ஏனைய-மற்ற.
காபி-விஷம்; பாஷாணம்.

இட்டுக்காட்டி-இல்லாததைக் கலந்துகாட்டி.
கறை-குற்றம்.
பொறி-ஐம்பொறிகளில் ஒன்றாகியசெவி.
சொரிகுழல்-சரிந்தகூந்தலையுடையபெண்.
உரமாய்-வலிமையாய்.
புரை-குற்றம்.
வரிசை-ஒழுங்கு.

பக்கம்-36.

எத்தானும்-எதனாலும்.
ஏறுமாறு-குழப்பம்.
நன்றொழுகாவிடில்-நன்றாக நடக்காவிடில்.
சகடம்-வண்டி.
அகதி-கெட்டகதி.
இணைந்து-சேர்ந்து.
மன்றல்-கலியாணம்.
துன்றிய-நெருங்கிய.
விகாரம்-மனவிகற்பம்; கெட்ட இச்சையாலுண்டாம் கவலை.

பக்கம்-37.

விரகம்-காதல்.
சையோகம்-சேர்க்கை.
தாகம்-விருப்பம்.
ஈரம்-அன்பு.
சோரம்-திருட்டு.
ஆரும்-பொருந்தும்.
தூறும்-பழிக்கும்
தூக்கிஆயாது-ஆராய்ந்தறியாமல்.
கூறுகெட்டு-தன்மைகெட்டு, அல்லது வகைகெட்டு.
படர்-நடக்க.
சார்பு-சேர்க்கை.

பக்கம் 38

சேய்கள்-பிள்ளைகள்.
இவண்-இவ்வுலகில்.
ஈண்டு-இவ்விடத்தில்.
புழக்கம்-பழக்கம்.
கவலுவர்-கவலைப்படுவர்.
நறு-நல்ல.
ஐயுற-அழகுபொருந்த.
சாதனை-பயிற்சி.
பணித்து-கட்டளையிட்டு.

பக்கம்-39.

பக்குவம்-தகுதி.
அக்கம்-தானியம்.
ஆக்கை-உடம்பு.
சமயம்-தருணம்.
இலகுவர்-விளங்குவார்கள்.

பக்கம்-40.

பெரிதும்-மிகவும்.
குலாவி-சிநேகஞ்செய்து.
கறபனை-கல்வி, கட்டளை.
சற்பனை-சதி; சாவு.
விற்பனம்-அறிவு.
சுருதி-நூல்.
வெளவா-எடுத்துக்கொள்ளாத.
மேட்டிமை-மேன்மை.
வித்தகம்-ஞானம்.

பக்கம்-41.

சீலம்-ஒழுக்கம்.
புல்லோர்-அற்பர்.
நயந்து-விரும்பி.
போகம்-அனுபவம்.
மகிழை-சந்தோஷத்தை.
வினைப்பயன்-முற்செய்கையின் பலன்.
செறி-நெருங்கிய.
அறிவுரை-புத்தியுண்டாக்கும் சொல்.
அறைந்தி-சொல்ல.
உறுமிது-பொருந்திய இது.
நெறி-நன்மார்க்கம்.

சிட்சை-கண்டிப்பு.

பக்கம்-42.

பார்-அன்னியர்
கரம்பெறு-கையில் தாங்கும்.
வரம்பு-அளவு; எல்லை.
வரம்-தேவரசகை.
மாவிரு-மிகப்பெரிய.
சீலம்-நல்லறிவு; நற்குணம்.
ஒழுக்கம்-நன்னடக்கை; ஆசாரம்.
தாலம்-பூமி.
இசை-கீர்த்தி,
தெள்ளிய-தெளிவான.
குரவோர்-தாய் தந்தையர்.
எந்தை - எமது பிதாவாகிய கடவுள்.

பக்கம்-43

தோழரில் பிரித்து-தோழரை விட்டு நீக்கி
சிக்கென-உறுதியாக.
சுந்தரம்-அழகு.
புக்கிட-பிரவேசிக்க.
செந்நெறி - செம்மையான மார்க்கம்; ஒழுங்கான வழி.
வதிய-தங்க.
தரித்தல்-மேற்கொளல்.

பக்கம்-44

நைய-வருந்த.
நவையுறு-குற்றம் பொருந்திய.
காட்சித்து - தோற்றத்தை யுடையது.
மாண்புறு-அழகு பொருந்திய.
தள்ளை-தாய்.
வெள்ளை மதி-பேதைப் புத்தி.
கொளுத்தி-கொள்ளச்செய்து.

பக்கம்-45.

வீசும்-மோதுகின்ற.
புன் குறைவு-சிறிது குறைவு.
நிறை-கற்பு.
நீசித குணம்-தாழ்ந்த தன்மை.
ஆதரவில்லாள் - வீட்டிற்காதாரமாகிய மனைவி; அன்புள்ள மனைவி.
ஐம்பொறி - பஞ்சேந்திரியங்கள்; மெய், வாய், கண், மூக்கு, செவி.
முன்னவன்-கடவுள்.
இன்னருள்-இனிய கிருபை.
கண்ணி-குறித்து.
உருத்திகழ்-அழகு விளங்கும்.

பக்கம்-46.

பரபுருஷன்-அன்னிய ஆடவன்.
சல்லாபம்-கூடிப்பேசல்; சம்பாஷணை.
அசைத்திடும்-மனத்தைக் கலக்கிவிடும்.
கற்பணி-கற்பைக்கொண்ட
நிகழ்த்திட-சொல்ல.
கேண்மோ-கேளுங்கள்.
யாக்கை-உடம்பு.
எங்குமிருப்போன்-கடவுள்.

பக்கம்-47.

மன்றல்-கலியாணம்.
வானுக்கு-கணவனுக்கு.
ஒன்றுகிருக்க-சேராதிருக்க.
மோக்ஷம்-முத்தி.
ஐயன்-கடவுள்.
ஐம்புலன் - ஐந்தறிவு; ஸ்பரிசம் (அதாவது உடம்பிற்படுவதை யுணர்தல்), உருசி, பார்வை, வாசனை, சத்தம்.
துலக்கி-விளக்கி.
பாதகம் ஏழு-அகங்காரம், உலோபம், காமம், பகை, போசனப் பிரியம், காய்தல், சோம்பல்.
கற்பனை-கட்டளை.

எம்பிரான்-எமது கடவுள்.
தம்பம்-சதம்; பற்றுக்கோடு.
பூவாழ்வு-உலக வாழ்க்கை.
பாசம்-ஆசை.
பந்தம்-பற்று.
பற்று இரண்டு - ஆசை இரண்டு
(அகப்பற்று, புறப்பற்று.)

துப்பறியும் நாவல் ! வெளியாய் விட்டது !!

சோமசுந்தரம்

அல்லது சுகந்தவிலாச ரகசியம்.

(ஸ்ரீமான் ச. செல்வராஜ் ரெட்டியார், பி. ஏ., எல். டி.

இயற்றியது.)

ஓர் அதியற்புத மனோகரமான துப்பறியும் நாவல். சொற்சுவை பொருட்சுவை பொருந்தியுள்ளது. கதாநாயகன், தான் காதலித்த கன்னிகையைக் கடிமணம் செய்வதற்கு ஏற்பட்ட இடையூறு, இன்னல் அனைத்தையும் இனிமையுடன் சகித்து, இறுதியில் தன் காதலியைக் கைக்கொள்வது மிகு உருசிகரமாயிருக்கும். நல்ல கிளேஸ் காகிதத்தில் நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கிறது.

விஷய அட்டவணை.

அத்தி.	விஷயம்	பக்கம்.
1.	சோமசுந்தரத்தின் பிறப்பு வளர்ப்பு	1
2.	காதல் நிகழ்ச்சி	18
3.	படுகொலை	37
4.	கொலை செய்தவன் யார்? கூன் பேய்!	54
5.	மரண விசாரணை	72
6.	பிரமாணிக்க முள்ள ஊழியன்	89
7.	பொன்னனைத்தேடல்	107
8.	கைக்கெட்டியது, வாய்க்கெட்டவில்லை	124
9.	துன்பத்தின்மேல் துன்பம்	
10	சந்தேக நிவர்த்தி	
11.	வைத்திய பரிசோதனை	178
12.	சுகந்த விலாச ரகசியம்	200
13.	விவாஹ மஹோற்சவம்	224
14.	முடிவுரை	238

இதன் விலை ரூபா 1-0-0 தபாற்கூலி வேறு.

செல்வம் அண்டு கம்பெனி.

பரங்கிமலை.

2-ம் பதிப்பு ! 2-ம் பதிப்பு !!

ஞானனந்தன்

அல்லது

பிரளயத்தில் கண்டெடுத்த பாலன்.

மிஸ்டர் ஏ. டேவிட், (A. DAVID) எழுதியது. கதாநாயகனுகிய ஞானனந்தன் குழந்தைப் பருவத்தில் வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோக, அக்குழந்தை இறந்து போனதாக அதன் பெற்ருேர் துக்கித்து வருந்துவதும்; பின்னர் அது அற்புதமாக ஓர் பெருத்த சீமான் வீட்டில் சுகமாக வளர்க்கப்பட்டு, கல்வி முதலியவை கற்றுப் பூரண பாண்டித்திய மடைந்து யௌவன புருஷனுனபோது, பெற்ருேர் ஆச்சரியமான விதமாகத்தமது புத்திரனைக் கண்டு ஆனந்திப்பதும் ஆகிய விஷயங்கள் விமரிசையாக விளக்கப்பட்டுள்ள பாகங்களில் முறையே சோக இரசமும், ஆனந்த இரசமும் ததும்பி நிற்கின்றன. வாசிக்க, வாசிக்க வெகு இனிமையாக இருக்கும். வாசிக்கத் தொடங்கியபின் புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது. இக் கதையைப் படித்த பின்னரே, இதன் அருமை தெரியும்.

நல்ல உயர்ந்த கிளேஸ் காகிதம், டபிள் கிரௌவுன் 148 பக்கங்கள் கொண்டது. கதா நாயகன், கதா நாயகிகளின் உருவங்கள், பிரளயத்தில் பாலன் கண்டெடுக்கப்படும் காட்சி, இரெயில்வே ஸ்டேஷனில் தற்செயலாக ஞானனந்தன் தன் தந்தையைக் காணுங் காட்சியாகியவைகளைக் காட்டும் மூன்று அழகிய ஆப்டோன் படங்களுடையது.

விலை அணு 0-12-0

3-ம் பதிப்பு! 3-ம் பதிப்பு!!

ஜெயசீலி.

அல்லது

கன்னியர் பொக்கிஷம்.

மிஸ்டர் ஏ. டேவிட் (A. DAVID) எழுதியது. பெரியோர்களேயன்றிச் சிறுவரும், சிறுமிகளும் தாராளமாய் வாசித்து நன்மை படையக்கூடிய அருமையான இனிய செந்தமிழ்நாவல். படிக்கப் படிக்கப் பாலுந்தேனும் பருகுவதைபோல் தித்திக்கும் தீஞ்சுவை பொருந்தியது. எடுத்தபிறகு வைக்கவொட்டாமல் இடையருது

இன்ப மூட்டுவது. நாவல்மேல் வெறுப்புள்ளவர்களையும் விருப்புறச்செய்யும் அபூர்வ சக்திவாய்ந்தது. கதா நாயகியாகிய ஜெயசீலி என்பவள் ஆதியில் அநாதையாய்த் தன் பிறப்பு வளர்ப்புத் தெரியாமல் கலங்கி கஷ்டம் அனுபவித்தாளாயினும், நாளாவட்டத்தில் தனது நற்குண நற்செய்கைகளால் விளங்கி, ஒரு பிராமணக் குடும்பத்தை அஞ்ஞானத்தினின்றும் மெஞ்ஞானவழிக்குக் கொணர்ந்து சத்தியமறையிற் சேர்த்ததோடு, அக்குடும்பத்திலேயே தான் பிறந்தவளென்று கண்டு பிரமித்துப் பேரானந்தங்கொண்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்து சோகமுறுவது வெகு உருக்கத்தைத் தரும். கடைசியாக ஜெயசீலிகொண்ட கருத்து நிறைவேறியதுபோல் தன் தாயையும், சகோதரியையும், சகோதரனையும் மனந்திருப்பிய பின்னர், உலகத்தை வெறுத்துத் துறவறம் பூண்டு கன்னியர் மடம் பிரவேசித்தல் முதலிய விஷயங்கள் இனிமையாக விளக்கி வரையப்பட்டிருக்கின்றன. இதில் இரண்டு அழகிய ஆப்டோன் படங்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 6. தபாற்கூலி வேறு.

அருமையான நாவல்கள்.

		ரூ. அ. பை.
1	கமலநாதன். அல்லது களவுபோன இரத்தின மாலை. ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றியது	1—8—0
2	திருக்கழுக்குன்றத்துக் கோலை. (எஸ். எஸ். அருணகிரிநாதன் இயற்றியது.)	1—8—0
3	கருங்குயில் குன்றத்துக் கோலை, 1-ம் பாகம்.	1—6—0
	ஷை 2-ம் பாகம்.	1—6—0
	ஷை 3-ம் பாகம்.	1—6—0
4	அமிர்தகுமாரி, அல்லது செஞ்சிப்புதையல் (எஸ். எஸ். அருணகிரிநாதன் இயற்றியது.)	1—4—0
5	சதாநந்தர். அல்லது சமரபுரித் துறவியின் சம்சாரவாழ்க்கை. (நாகை சொ. தண்டபாணிப் பிள்ளை இயற்றியது.) அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.	1—4—0
6	அமிர்தவல்லி. (அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.)	

இது ஓர் அற்புதமான தமிழ் நாவல், இனிய நடை, புதியகதை அலங்காரச் சொற்கள், இதுவரை கேட்டிராதகற்பனை, யாவருக்கும்

தெவிட்டாத இன்பத்தேன், படிக்கப் படிக்க மிக்க ருசிகரமாக விருக்கும். இவ்விதமான நாவலை நீங்கள் இதுவரையிலும் படித்தே இருக்கமாட்டீர்கள். ஆதலால் அவசியம் வாசித்தறியவேண்டிய நாவல்.

விலை ரூ 1—4—0

7 மனோரஞ்சித மனோன்மணி.
காலஞ் சென்ற சங். சின்னப்பநாத சுவாமிகள் செய்தது. கத்தோலிக்கருக்கு உத்தமமான நாவல். விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

8 உடைபடாமுத்திரை.
அல்லது பாவ சங்கீர்த்தனத்தின் மகிமை. (சங். எம். ஜே. மிக்கேல் சுவாமிகள் இயற்றியது.) 1—0—0

9 பத்மநாபன்.
(அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.) 0—14—0

10 கபடசந்யாசி:—போகாநந்தர். 0—14—0

11 கலாசுந்தரி.
நாகை. சொ. தண்டபாணிப் பிள்ளை இயற்றியது. 0—12—0

12 இரகுநாதன்.
ஆச்சரியமான துப்பறியும் நாவல். 0—12—0

13 தனபாக்கியம், அல்லது தாய்தந்தையற்ற பெண் (ஸ்ரீமான் ஏ. டேவிட் இயற்றியது.) 0—10—0

14 காஸில்டா, அல்லது மூரிய இராஜகுமாரி (ஸ்ரீமான் செல்வராஜ் ரெட்டியார் பி.ஏ. எல்.டி., இயற்றியது 0—9—0

15 திலோத்தமை. 0—8—0

16 சுசீலா, அல்லது கபாலமலைக் கள்வர். ஆப்டோன் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. (ஸ்ரீமான் ச. செல்வராஜ் ரெட்டியார் பீ. ஏ., எல். டி., இயற்றியது.) 0—6—0

17 [illegible]வீரன், அது ஓர் அற்புதமான நாவல். ஸ்ரீமான், ச. செல்வராஜ் ரெட்டியார் பி. ஏ., எல். டி. இயற்றியது. கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. வாசிக்க வெகு பிரியமாயிருக்கும்.

விலை 0—14—0

18 கோங்குநாட்டரசி, அல்லது குணசுந்தரம். 1—4—0

எமது விலாசம்:—

செல்வம் அண்டு கம்பெனி,
480, சில்வர் தெரு, பரங்கிமலை.

59009
715

வெளிவந்துவிட்டது! விற்பனைக்குத் தயார்!!

வேதானந்தம்

அல்லது

வெள்ளிச் சிலுவை

(ஸ்ரீமான் ச. செல்வராஜு ரெட்டியார் பி.ஏ., எல்.டி., எழுதியது)

அநேக அரிய சன்மார்க்க நாவல்களை இயற்றியவரும், 'பொது நலம்' எனும் அரிய பத்திரிகையின் ஆசிரியருமாகிய ஸ்ரீமான் செல்வராஜு ரெட்டியாராலேயே இந்நாவல் வரையப் பட்டுள்ளதென்பதினாலேயே இந்நாவல் எல்லா சிறப்பும் உடையதென்று தெரிந்துகொள்ளலாம்.

இதுவரையில் இத்தகைய பக்தி நிறைந்த நாவல் தமிழுலகில் வெளிவரவில்லையென்று சொல்லத்தகுந்த புதிய நூல். வேதானந்தம் என்னும் அனாதைச் சிறுவன் சத்திய வேதத்துக்காக பட்ட கஷ்ட நிஷ்டூரங்களும் அவன் பிறமதஸ்தரை மனந்திருப்பக் காட்டிய ஊக்கமும் சாந்தவதியென்னும் உத்தமப் பெண்மணியின் பாதுகாவலில் சின்னப்பநாத சுவாமிகளின் தத்து பிள்ளையாக வளர்ந்துவந்ததும், அவனிடம் அமோகமாய் விளங்கிய தெய்வபக்தியும் வாசிப்பவர் மனதை யிளக்கி வேதானந்தனுடைய நன்மாதிரியைப் பின்பற்றி நன்னெறியில் பழகி யுய்யும்படி தூண்டாமல் போகாவென்பது திண்ணம். அச்சிறுவனை விரோதித்துப் பல வித இன்னல்களை யுண்டுபண்ணிய திருமர்ரான் கடைசியில் மனந் திரும்பிய விதமும், மூத்தன் சரிதையும், மரியாள் என்னும் சிறுமி மனந்திரும்பித் திடமனதுடன் தனது தந்தையைச் சத்திய மறைக்குள் கொண்டுவரச் செய்த முயற்சியின் பலனும் கடைசியாக வெள்ளிச் சிலுவை இச்சரிதையின் மர்மத்தைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கும் அரிய விஷயமும் படிக்கப்படிக்க இனிப்பைத் தந்து இந்நூலின்பால் வாசகரை ஈடுபட்டிருக்கச்செய்யும் என்பதிற் சந்தேகமில்லை. விலை ரூபா 1—0—0.

செல்வம் அண்டு கம்பெனி, 480, சில்வர் தெரு, பரங்கிமலை.

புதிய நாவல்! வெளியாய்விட்டது!!

தனபாக்கியம்

அல்லது

தாய் தந்தையற்ற பெண்

(ஸ்ரீமான் ஏ. டேவிட் இயற்றியது.)

இது ஓர் அற்புதமான நாவல். பழிபாவத்துக்கஞ்சாத பாதகியான அமிர்தவல்லி என்பாள் தன் நாத்தி மகளாகிய தனபாக்கியம் என்னும் தாய் தந்தையற்ற குழந்தையைக் கொல்லக் கருதி அதைக் கொலையாளரிடம் ஒப்புவிக்க, அது "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்றபடி கொலைக்குத் தப்பி நல்ல இடத்தில் சேர்ந்து வளர, "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற்கிணங்க, ஷை அமிர்தவல்லியின் அருமை மகனே அவலமாய்ச் சாதல்; அதுகண்டு அவள் ஆறாத் துயரங்கொண்டு தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதல்; ஷை கெட்ட செயலுக்கு உதவியாயிருந்த "வெள்ளைப் புடவைக்காரி" என்பாள் வெளிவேஷங் காட்டி வெகு சாமர்த்தியமாக வேலை செய்தபோதிலும், கடைசியாய் "துஷ்டர்களுக்குத் தண்டனை தப்பாது" என்பதற்கொப்ப, அவள் அவமானமும், தண்டனையும் அடைந்த விதம் முதலிய விருத்தாந்தங்கள் ஷை புத்தகத்தில் எளிய தமிழில் இனிமையாய் விளக்கப்பட்டிருக்கின்றன. நீதி நெறிகள் பல நிதர்சனமாகக் காட்டப்பட்டுள்ள அருமையான நாவல். பெரியவர்களேயன்றிச் சிறுவரும், சிறுமிகளும் சிறிதும் சங்கோசமின்றி, தாராளமாக வாசித்து நற்பயனடையக்கூடிய நல்ல நாவல். இத்தகைய நாவல் இதுவரையில் வெளிவந்திலது. நாவல் வாசிக்கப் பிரியப்படுபவர்கள் இத்தகைய நாவல்களையே வாங்கி வாசித்தல்வேண்டும்.

விலை அணா 0—10—0. (தபாற்கூலி பிரத்தியேகம்.)

செல்வம் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

480, சில்வர் தெரு, பரங்கிமலை.

Messrs SELVAM & Co.,

480, Silver Street, St. Thomas' Mount.